# ஜவஹர்லால் நேரு

ஆக்கூர் அனந்தாச்சாரி
எழுதியது

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

கிட்டப்பா பிரசுராலயம்
செங்கோட்டை

விற்பனை உரிமையாளர் :
சக்தி காரியாலயம்
சென்னை : : மதுரை

முதற் பதிப்பு—1941

உரிமை பதிவு
செய்யப்பெற்றது

4501a

அணா 12

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை

# பரிச்சய வார்த்தை

நம் நாட்டின் பழைய ஏடுகளிலே—புராணங்களிலே இதிகாஸங்களிலே—காவியங்களிலே—தியாகத்தின் புனிதத்தையும் மேன்மையையும் பற்றி பலவாருக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அத்தனை ஏடுகளையும் புரட்டிப் படித்து வியாக்யானம் செய்கிறவர்கள் அதிகமாக தேசத்தில் இருக்கலாம்; இருக்கிருர்கள். ஆனல் வாழ்க்கையிலே தியாகம் காட்டுபவர்கள் எத்தனை பேர் இப்போதுண்டு? ஒருவன் தன்னலத்தை அடியோடு விட்டு உலக நலத்துக்காக தன்னையே எவ்வளவு தூரம் பலி கொடுத்துக் கொள்ளலாம் என்று அந்தக் கோடியின் எல்லையைக் காட்டும் இலக்கிய புருஷன் ஜவஹர்லால்.

அவருடைய ஆதர்சம் ததும்பும் வாழ்க்கை வரலாறு முழுவதையும், வெகு அழகாகவும் சுருக்கமாகவும் நண்பர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதியிருக்கின்ருர். பல விதமான தேசப்பணிகளுக்கிடையே, மிகவும் உபயோககரமான இச்சிறு நூலை ஆக்க முன்வந்த ஸ்ரீயுத அனந்தாச்சாரியாரை பாராட்டுகிறேன்.

ராயப்பேட்டை
சென்னை.
20—3—41

‘சங்கு’ சு. சுப்பிரமணியன்.

# முகவுரை

உலகிலுள்ள எந்த ஜீவராசியும் அடிமையாயிருக்க விரும்புவதில்லை. அவ்வாறிருக்க மானிடர்கள் அடிமைத் தனத்தை விரும்புவரோ? விரும்பினும் விரும்பாவிட்டாலும் நாற்பது கோடி பாரத மக்கள் இன்று அடிமைப் பட்டுக் கிடக்கின்றனர் என்பது உலகமறிந்த விஷயம்.

'அடிமையாய் வாழ்வதை விட சாவதே மேல்' என்கிற எண்ணத்தை மக்களிடையே மகாத்மா காந்தி பரப்பி வருகின்றார். அடிமைத் தனத்தினின்று பாரதமக்களை மீட்டு, சுதந்திர புருஷர்களாக விளங்கச் செய்ய வேண்டுமென்பதே மகாத்மாவின் பேரவா.

அம்மகானின் ஆவலைப் பூர்த்திசெய்து வைக்க, தமக்குள்ள யாவற்றையும் தத்தம் செய்து தியாக புருஷராய் திகழ்பவர்களில் தலைசிறந்தவர் நமது ஜவஹர்லால் நேரு. இவரே எதிர்காலத்தில் நம் நாட்டின் தலைமைப் பதவியை வகிக்கக் கூடியவர். ஆதலால் ஒவ்வொரு இளைஞனும் இவரது அற்புதமான வாழ்க்கை வரலாறுகளைப் படித்து, தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அவரைப் பின்பற்றி நாட்டின் விடுதலை இயக்கத்தில் ஈடுபடுவார்களாக! எனது இந்நோக்கம் கைகூடுமா?

இச்சிறு நூலுக்கு 'பரிச்சய வார்த்தை' எழுதிக் கொடுத்த எனது நண்பர் ஸ்ரீ சங்கு சுப்பிரமணியன் அவர்களுக்கும், இதை அச்சிட்டு வெளிக் கொணர பேருதவியாயிருந்த வேலம் மிராசுதார் ஏ. வி. குப்புசாமி செட்டியார், சென்னை பிரபல புத்தக வியாபாரி பி. ரங்கசாமி நாயகர், தண்டையார்பேட்டை வி. என். குமாரசாமி தம்பதிகள் முதலானோர்க்கும் எனது நன்றியறிதலை செலுத்திக் கொள்கிறேன்.

சென்னை.
20—3—41

ஆக்கூர் அனந்தாச்சாரி.

# ஜவஹர்லால் நேரு சரித்திரம்

## நேருவின் மூதாதையர்

பாதுஷா ஔரங்கசீபுக்குப் பிறகு அவன் புதல் பருச்சி டில்லி சக்கரவர்த்தியானுன். அவன் ஒருசமயம் காஷ்மீரம் சென்றபோது ஒரு மகாபண்டிதரை சந்தித்தான். அவர் பாரசீகத்திலும் சமஸ்கிருதத்திலும் வல்லவர். அவர் பெயர் ராஜ்கால். பாதுஷாவின் யோசனைக்கிணங்கி ராஜ் கால் குடும்பத்துடன் டில்லிக்கு வந்து குடியேறினுர். இதுநடந்தது 1716-ம் வருடம்.

நஹார் என்றுல் கால்வாய். கால்வாய் பக்கத்திலே ராஜ்கால் குடியிருந்தார். ஆகையால் அவருக்கு நேரு என்ற பட்டப்பெயர் வந்தது. அந்த பரம்பரையில் உதித்த லக்ஷ்மி நாராயண நேரு டில்லிபாதுஷாவின் தர்பாரில் வக்கீலாக அமர்ந்தார். அவர் குமாரர் கங்காதர நேருவோ டில்லியில் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தார். கங்காதர நேருவுக்கு ஒரு பெண்ணும், பன்ஸீதார் நேரு, நந்தலால் நேரு, மோதி லால் நேரு என்ற மூன்று பிள்ளைகளும் பிறந்தார்கள்.

## மோதிலால் நேரு வரலாறு

1857-ம் வருடம் சிப்பாய்க்கலகம் என்றழைக்கப் படும் புரக்ஷி ஏற்பட்ட சமயத்தில் கங்காதர நேருவின்

குடும்ப சொத்துக்கள் நாசமாயின. குடும்பம் ஆக்ராவிற்கு ஓடிற்று. மோதிலால் நேரு ஆக்ராவிலேயே 1861-ம் வருடம் மே மாதம் 6-ந் தேதி பிறந்தார். அவர் தாயாரின் கர்ப்பத்தில் இருக்கும் போதே, அவரது தகப்பனர் 34-வது வயதில் அகால மரண மடைந்தார்.

மோதிலால் நேருவின் மூத்த தமையனர் ஆங்கில அரசாங்கத்தில் நீதி இலாகாவில் வேலேபார்த்து வந்தார். அவர் தம்பி நந்தலால் நேரு ராஜபுதனத்தில் கேத்ரி சமஸ்தானத்தில் பத்து வருடம் திவாஞக இருந்து பிறகு வக்கீலானர். மோதிலால் நேரு இவருடனேயே வசித்துவந்தார். ஆக்ரா உயர்தர நீதிமன்றம் அலகாபாத்துக்கு வரவே, வக்கீல் தொழில் செய்யும் நந்தலால் நேரு, குடும்பத்தோடு அலகாபாத்துக்கு வந்து அதை வாசஸ்தலமாக்கிக் கொண்டார்.

## பரீக்ஷை தினத்தில் தாஜ்மஹாலில் காலங் கழித்தல்

மோதிலால் நேரு கான்பூரில் பள்ளிக்கல்வியையும் அலகாபாத்தில் காலேஜ் கல்வியையும் பெற்ருர். சிறு பிராயத்தில் பாரசீக அரபி பாஷைகளேயும் பதினைந்து வயதுக்குப் பிறகு ஆங்கிலமும் கற்கத் தொடங்கினர். பள்ளியில் காவிகள் கூட்டத்திற்கு தலைவர் யாரென்ருல் அது மோதிலாலே. சிறு போழ்தில் அவர் படிப்பில் கவனம் செலுத்தியதேயில்லே. சதா விளையாட்டுதான். குறும்புத்தனம்தான். சிறிது முரட்டு சுபாவம் இருந்த போதிலும் இங்கிலீஷ் ஆசிரியர்களுக்கு அவரிடம் அன்பு அதிகம். பள்ளியில் படிக்கும்போதே அவருக்கு மேஞட்டு உடையிலும் பழக்க வழக்கங்களிலும் மோகம் அதிகம். மோதிலால் பீ. ஏ. பரீக்ஷைக்குச் சென்ருர். முதல்நாள் விடையெழுதிக் கொடுத்தது அவருக்கே

திருப்தியளிக்கவில்லை. ஆகையால் பரீக்ஷையில் தேறமுடியாது என்று நினைத்து மற்ற பரீக்ஷைகளில் எழுதாமல் தாஜ்மஹால் கட்டிடத்தில் போய் மற்ற தினங்களைக் கழித்தார். நினைத்ததற்கு மாருக முதல்நாள் பரீக்ஷையில் தேறினர். ஆயினும் அவர் ஒரு நாளும்பி. ஏ. பட்டதாரியாக ஆகவேயில்லை.

தமது தகப்பனர் பிரபல வக்கீலாயிருந்தவ ராதலால், மோதிலால் நேருவும் அத்தொழில் மீது நாட்டங் கொண்டார். சட்டம் படித்து வக்கீல் பரீக்ஷையில் முதன்மையாய் தேறி, கான்பூர் ஜில்லா கோர்டில் முதன் முதலாக தொழில் ஆரம்பித்தார். விரைவிலேயே நல்ல வருமானம் கிடைத்தது. பிறகு அலகாபாத் ஹைகோர்ட்டில் தொழில் நடத்தலானர்.

## மோதிலாலின் வருமானமும் ஆடம்பர வாழ்க்கையும்

தகப்பனைப் போல் இருந்த தமையன் நந்தலால் நேரு திடீரென இறந்தார். ஆகவே குடும்ப பாரம் மோதிலால் நேருபேரில் விழுந்தது. தமையனரின் கக்ஷிக்காரர்களெல்லாம் இவரது கக்ஷிக்காரர்களாக ஆயினர். வழக்குகளும், அதற்கேற்றுப் போல் பணமும், வந்து குவிந்தன. ஓய்ச்சல் ஒய்வின்றி தொழிலிலேயே பூரா நேரத்தையும் கழித்தார். யாருடைய ஒத்தாசையுமின்றி, திடசங்கல்பத்தாலும், கூர்மையான புத்தி விசேஷத்தாலும் அவர் தொழிலில் வெற்றியடைந்தார். இதனுல் அவருடைய பெருமையும் சுயமதிப்பும் அதிகரித்தன. ஏராளமான வருமானம்வர, செலவும் அதற்கேற்றபடி அதிகமாயிற்று. சம்பாதிக்க சாமர்த்திய மிருக்கும்போது மீத்திவைக்க முயல்வது கேவலம் என்று எண்ணினர். ஆகையால் நன்ருகச் செல

வழித்து ஆடம்பரமாக வாழ்க்கை நடத்த ஆசைப்பட்டார். வீட்டில் மேனாட்டு நாகரீகமும் குடியேறியது. இந்நிலைமையில் 1889-ம் வருஷம் நவம்பர் மாதம் 14-ந் தேதி அலகாபாத்தில் ஜவஹர்லால் நேரு பிறந்தார்.

## மோதிலாலுக்கும் சப்ரூவுக்கும் நீந்துதலில் போட்டி

1899-ம் வருஷம் ஆனந்தபவனுக்குக் குடித்தனம் வந்தார். அதில் பெரிய தோட்டமும் தடாகமும் உண்டு. மோதிலாலுக்கு நன்முய் நீந்தத்தெரியாது. இருந்தாலும் பற்களைக் கடித்துக்கொண்டு கைகால்கள் சளைத்தாலும் குட்டை முழுதும் நீந்திவிடுவார். அப்பொழுதுதான் வக்கீல் தொழில் நடத்த ஆரம்பித்தார் மோதிலாலின் நண்பரான தேஜ்பகதூர் சப்ரூ. அவர் ஓரடி தண்ணீருள்ள முதல் படியிலேயே உட்கார்ந்து கொள்வார். இரண்டாம் படிக்கட்டுக்குக்கூட நகரமாட்டார். வற்புறுத்தினல் குய்யோமுறையோ என்று கத்துவார். தமது நண்பர் சாப்ரூவைவிட, தான் மிகவும் கெட்டிக்காரர் என்று மோதிலால் நேரு பெருமை யடித்துக் கொள்வதுண்டு.

அலகாபாத்தில் மோதிலால் நேரு ஒரு நவாபைப்போல் விளங்கினர். வருவாயும் செலவும் லக்ஷக்கணக்கா யிருந்தது. மதிப்பிலும் உபசரிப்பிலும் அவரது மாளிகையான ஆனந்தபவன் சிறந்து விளங்கியது. தினசரி விருந்துதான். அது கவர்னர்களின் மாளிகைகளைவிட சகல விஷயத்திலும் பெருமை பெற்றிருந்தது. அவரது மாளிகையில் விருந்துண்ணுத அதிகாரிகளே அக்காலத்தில் கிடையாது.

## ஜவஹர்லாலைப் படிக்கவைக்க சீமை செல்லுதல்

ஜவஹர்லாலை படிக்க வைப்பதற்காகவே அவர் தமது குடும்பத்துடன் 1905-ம் வருஷம் இங்கிலாந்து சென்றார். தன் மகன் உயர்ந்த அரசாங்க உத்தியோகத்தில் அமர வேண்டுமென்கிற எண்ணம் அவருக்கில்லை. தம்மைப் போலவே சுதந்திரமான தொழில் நடத்த, ஜவஹர்லாலை பாரிஸ்டராக ஆக்கவேண்டு மென்பதே அவரது ஆசை. அவர் அடிக்கடி ஐரோப்பாவிற்கு போய்வருகிறார் என்கிற காரணத்தினால் காஷ்மீர பிராம்மணர்கள் அவர்மீது கோப மடைந்து பிராயச்சித்தம் செய்து கொள்ளும்படிக் கேட்டனர். ஆனால் அது முடியாதென அவர் மறுத்துவிட்டார்.

## முதல் நம்பர் மிதவாதி

அவர் முதல்நம்பர் மிதவாதியா யிருந்தார். தீவிர வாதிகளைத் தாக்கிப்பேச சற்றும் தயங்கமாட்டார். அப்படி யிருந்தவர், பெஸண்டம்மையார் காவலில் வைக்கப்பட்டதும் மாறிவிட்டார். பழைய வைதீக மிதவாதக் கொள்கையை ஒழித்துவிட்டு சுயஆட்சி சங்கத்தில் (ஹோம்ரூல் லீக்) சேர்ந்தார்.

## மோதிலால் வெறுந்தரையில் படுத்துப் பழகுதல்

1919-ம் வருஷம் அலகாபாத்தில் 'இண்டிபெண் டெண்ட்' என்கிற தினசரிப் பத்திரிகை ஆரம்பித்தார். ரௌலட் சட்ட சத்தியாக்கிரகத்திற்கு விரோதமா யிருந்தார். அதனால் தன் மகன் ஜவஹர்லால் எங்கு சிறைக்குப்போக நேரிடுமோ என்ற நினைப்பே அவ்விரோதத்திற்குக் காரணமா யிருக்கலாம். பிள்ளைமீது தகப்பனருக்கு அவ்வளவு அளவு கடந்த பாசம்! ஜவஹர்லால் ஒருவேளை சிறைசென்றால் வெறுந்தரையில் படுத்துக்கொள்ள நேரிடுமே என்று எண்

ணினர். அது எவ்வாறிருக்குமென்பதைத் தெரிந்துகொள்ள தாமும் தரையில் படுத்துப் பார்த்தார். காந்தியடிகளை தம திருப்பிடத்திற்கு வரவழைத்து மோதிலால் நேரு என்ன சொன்னரோ தெரியவில்லை. உடனே காந்தி ஜவஹர்லால் நேருவைக் கூப்பிட்டு 'தகப்பனர் மனம் வருந்தும்படி அவசரப்பட்டு எதையும் செய்துவிடவேண்டாம்' என்று சொன்னர்.

## பஞ்சாப் படுகொலையினல் தீவிரப் போக்கு

அவ்வருடம் ஏப்ரல் மாதம் 13-ந் தேதி நடந்த பஞ்சாப் படுகொலை அவருக்கு ஆத்திரத்தை மூட்டியது. அதன் பின்னர் தமது பழைய வாழ்க்கையை அடியோடு மாற்றிக்கொண்டார். பஞ்சாப் படுகொலையைப் பற்றி விசாரிக்க காங்கிரஸ் ஒரு கமிட்டியை நியமித்தது. அதில் அவரும் அங்கம் வகித்தார். அவ்வருடம் டிசம்பரில் அமிர்த ஸரஸில் நடந்த காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். லோகா மான்ய திலகரிடம் பெருமதிப்பு கொண்ட மோதிலால் அதெப்படி சும்மாயிருக்க முடியும்?. ஆகவே அரசியலில் பங்கெடுத்துக்கொண்டார்.

## ஒத்துழையாமையில் சேர வாழ்க்கையை மாற்றிக் கொள்ளுதல்

1920-ல் ஒத்துழையாமை இயக்கம் நாட்டிலே தோன்றியது. மோதிலால் நேரு அதில் சேருவதானல் முதலாவது அவர் தமது வக்கீல் தொழிலை நிறுத்தவேண்டும். அவரோ அதிகமாகப் பணச்செலவாகும் பழக்கங்களை கைக் கொண்டிருப்பவர். ஆகையால் அவர் தமது ஏராளமான வரு மானத்தை இழப்பதென்பது சுலபமான காரியமல்ல. அவர் வருமானத்தை இழப்பதானல் தமது வாழ்க்கையையே

அடியோடு மாற்றிக்கொண்டாகவேண்டும். அப்போது அவருக்கு வயதோ அறுபது. இந்த வயதில் அவர் தமது பழைய வழக்கங்களை உதறித்தள்ளிவிட்டு, புதிய வழக்கங்களை உண்டுபண்ணிக்கொள்வது கஷ்டந்தான். எனினும் அக்கஷ்டத்தை எப்படியாவது சகித்துக்கொள்வதென முடிவுகட்டினர்.

## மகாத்மாவின் திட்டத்தை ஆதரித்ததின் காரணம்

அவர் உற்சாக மேலீட்டால் எக்காரியத்தையும் செய்பவரல்ல. ஆரதீர யோசித்த பிறகே எதிலும் இறங்குபவர். மகாத்மாவின் சத்தியாக்கிரக பாதையோ அப்போது புதிது. வழிதெரியாத புதுப்பாதையில் போக அவர் சற்றுத் தயங்கினர். என்றாலும் அவருக்கு எப்போதும் பேச்சைவிட செயல் ஆற்றுவதில் ரொம்பவும் பிரியம். 'காந்தியடிகளின் ஒத்துழையாமை திட்டத்தால் வெறும் பேச்சு பேசுவது நின்று போகும்; ஜனங்கள் செயலில் இறங்க தூண்டப்படுவார்கள்' என்று அவர் நிச்சயித்தார். அதுவுமன்றி காந்தியடிகளின் குணங்கள் அவரை மிகவும் பரவசப்படுத்தின. ஆதலால் அவர் காந்தியடிகளை முழுமனதுடன் ஆதரித்தார்.

## எளிய வாழ்க்கையும் அபார தியாகமும்

அதன்பயனாக அவரது சுபபோக வாழ்க்கை எளிய வாழ்க்கையாக மாறிவிட்டது. மதுபானம் செய்வதை விடுத்தார். மெல்லிய பட்டாடை அணியாமல் கரடுமுரடாயிருக்கும் கதரை அணிய முன்வந்தார். ஒத்துழையாமை ஆரம்ப காலத்தில் மகாத்மா அலகாபாத்திற்குச் சென்று சீமைத்துணி குவியலுக்கு தீ வைத்தார். அக்குவியலில் அநேகமாக மோதிலால் நேருவின் உடுப்புகளே இருந்தன. அவை ஆயிரக்

கணக்கான ரூபாய் பெறுமானவை. ஒத்துழையாமை இயக்கத்தில் தாம் மட்டும் சேர்ந்ததோடு நிற்கவில்லை. தம் மனைவிமக்கள், பந்து ஜனங்கள் எல்லோரையும் ஈடுபடுத்தினார். குடும்ப சகிதம் சிறைபுகுந்தார். எல்லாவற்றையும் விட அவர் செய்த சிறந்த காரியம் இதுதான்.

## கவர்னர் காட்டிய பரிவு

மோதிலால் நேரு கைதியானதும் நைனிடாலுக்கு கொண்டு போகப் பட்டார். அங்குள்ள நேர்த்தியான கட்டட மொன்றில் அவருக்கு வேண்டிய சகலசௌகர்யங்களையும் அமைத்து அதில் அவர் இருக்க ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அப்போது ஐக்கிய மாகாண கவர்னரா யிருந்த ஹார்கோட் பட்லர் மோதிலால் நேருவின் நண்பர் என்ற முறையில் காட்டிய பரிவு இது.

## சுயராஜ்ய கக்ஷியின் ஆரம்பமும் முடிவும்

ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்படவே சித்தரஞ்சன தாஸுடன் சேர்ந்துகொண்டு சுயராஜ்ய கக்ஷியை ஏற் படுத்தினார். சட்டசபைப் பிரவேசம் வேண்டுமென அபிப் பிராயப் பட்டார். மகாத்மா காந்தியின் கொள்கைக்கும் திட் டத்துக்கும் அது விரோதமாகும் என்று ராஜாஜி மோதிலால் நேருவின் திட்டத்தை எதிர்த்தார். 1922-ல் நடந்த கயா காங்கிரஸில் அவரது திட்டத்திற்கு ஆதரவு கிடைக்க வில்லை. என்றாலும் 1924-ல் மகாத்மா காந்தி சிறையிலிருந்து வெளிவந்ததும் மோதிலாலுக்கு விட்டுக் கொடுத்தார். சுயராஜ்ய கக்ஷியினர் சட்டசபைக்குச் சென்று சிறிதுகாலம் அங்கிருந்து பார்த்தனர். எவ்வித பிரயோஜனமும் ஏற் படாமற் போகவே சட்டசபையிலிருந்து தமது கோஷ்டி யுடன் மோதிலால் நேரு வெளியேறினார்.

இவர் சீமையில் பிரிவிகவுன்சில் நீதிஸ்தலத்தில் ஓர் ஜமீந்தார் வழக்குக்காக ஆஜராகவேண்டி யிருந்தது. இதற்காக அவர் 1927-ம் வருஷம் ஐரோப்பா சென்றார். அவ் வழக்கில் இவரோடு ஆஜரானவர் ஸர். ஜான் சைமன் என்பது குறிப்பிடத்தக்கது. இதே சைமன்தான் மறு வருஷம் ஏழு வெள்ளைக்கார பார்லிமெண்டு மெம்பர்கள் கொண்ட கமிஷனுக்குத் தலைமை வகித்து இந்தியாவுக்கு வந்தது. இந்தியர்கள் சுயராஜ்யத்திற்கு அருகதை யுள்ளவர்களா இல்லையா என்று பரிசோதிக்க வந்த சைமன் கமிஷன் அதுதான்.

## மீண்டும் காங்கிரஸ் தலைமைப் பதவியும் ஆனந்தபவன் தானமும்

1928-ம் வருஷம் கல்கத்தா காங்கிரஸுக்கு அக்கிராசனம் வகித்தார். அப்போது காங்கிரஸைவிட்டு விலகியிருந்த மகாத்மா காந்தியை அவ்வருஷ காங்கிரஸ் மகாநாட்டுக்கு வரும்படி வற்புறுத்தினார். மகாத்மாவைக் கலந்தாலோசித்த பிறகே குடியேற்ற நாட்டந்தஸ்து தர அரசாங்கத்துக்கு ஒரு வருஷ அவகாசம் கொடுக்கப்பட்டது. 1929-ம் வருஷம் டிசம்பர் 31-ந் தேதிக்குள் அது நிறைவேற்றப்படாவிடில் மறுநாள் முதலே காங்கிரஸின் லக்ஷியம் பூரண சுயராஜ்யமாக மாறிவிடும் என்று அறிவிக்கப்பட்டதும் இந்த காங்கிரஸில் தான்.

1929-ம் வருஷம் இறுதியில் இவர் காங்கிரஸ் தலைவர் பதவியை விட்டு விலகும்போது தமது ஆனந்தபவன் என்கிற மாளிகையை காங்கிரஸுக்கு தானமளித்தார்.

## தகப்பனாரே தனயனை கௌரவித்தல்

ஜவஹர்லால்மீது அளவற்ற வாஞ்சையுடையவர். தமது புத்திரன் மிகுந்த ஆர்வத்துடன் தேசசேவை செய்வதைக்

கண்டு பரம சந்தோஷமடைந்தார். அவர் சிறைபுகுவதே தமக்குப்பெருமையை அளிக்கக்கூடியது என நினைத்தார். ஜவஹர்லால் 1929-ம் வருஷம் லாகூர் காங்கிரஸுக்கு அக்கிராசனராக தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் ஊர்வலமாக வீதியில் வந்தபோது, மோதிலால் நேருவும் அவரது மனைவி ஸ்வரூபராணி நேருவும் ஓர் வீட்டுமாடியில் நின்றுகொண்டு ஜவஹர்லால் மீது புஷ்பமாரி பொழிந்தனர். ஜவஹர்லால் இதைக் கண்டு எழுந்து நின்று கைகூப்பி தாய் தந்தையரை வணங்கினர்.

## இரண்டாம் முறை சிறைவாசம்

1930-ம் வருஷம் உப்பு சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து ஜூன் மாதம் 30-ந் தேதி கைதியானர். ஆறுமாதச் சிறை தண்டனை கிடைத்தது. அப்போது அவரது தேகநிலை மிகவும் கேவலமாயிருந்தது. ஜெயிலதிகாரிகள் அவர்களால் இயன்றவரை சௌகர்யம் செய்து கொடுத்தனர். என்ன இருந்தாலும் சிறைதானே! ஆனந்தபவன் மாளிகையில் இருந்த மோதிலாலுக்கு பத்தடி நீளம் ஐந்தடி அகலமுள்ள அறை எப்படிப் போதும்?

## மோதிலால் நேருவின் சமரச யோசனை

மோதிலால் நேரு சிறைபுகும்போது லண்டன் டெய்லி ஹெரால்டு பத்திரிகையின் நிருபரான ஸ்லோகோம்ப் அவரைப் பேட்டிகண்டு பேசினர். அது சம்பந்தமாய் ஓர் அறிக்கை வெளிவந்தது. சர்க்கார் சில நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதானல் காங்கிரஸ் சட்டமறுப்பை நிறுத்திக் கொள்ள யோசனை செய்யும் என்பதுதான் அவ்வறிக்கையின் கருத்து. ஜவஹர்லால் நேருவையும், மகாத்மா காந்தியையும் கலந்து கொண்ட பிறகே திட்டமாக இதைப்பற்றி யோசிக்க முடியும் என்றும்

அவ்வறிக்கையில் கண்டிருந்தது. இது விஷயமாக சமரஸம் செய்துவைக்க சப்ரூ—ஜெயகர் கிளம்பினர். மகாத்மாவை ஜவஹர்லால் நேரு, மோதிலால் நேரு, இன்னும் மற்ற தலைவர்கள் யாவரும் எரவாடா சிறையில் சந்தித்து இதைப் பற்றிக் கலந்துபேச அரசாங்கம் ஏற்பாடு செய்தது. அதனுல் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

## தேக அசௌக்கியம் காரணமாக விடுதலை

இதற்கிடையில் மோதிலால் நேருவின் தேகநிலை நாளுக்குநாள் கேவலமாய்க் கொண்டேயிருந்தது. அவர் விடுதலை செய்யப் படுவார் என்கிற வதந்தியும் கிளம்பியது. தன் விஷயத்தில் பிரத்யேகச் சலுகை காட்டி விடுதலை செய்ய வேண்டாமென மோதிலால் நேரு இராஜப் பிரதிநிதியான இர்வின் பிரபுவுக்கு தந்தி யனுப்பினுர். என்றுலும் ஸெப்டம்பர் மாதம் 8-ந் தேதி அரசாங்கம் அவரை விடுதலை செய்து விட்டது. விடுதலைக்குப் பிறகு சிறிது காலம் முசோரியில் தங்கி வைத்தியம் பார்த்துக் கொண்டு அலகாபாத்திற்குத் திரும்பி விட்டார்.

## மகன் கைதியானதால் ஏக்கமும் துணிவும் தீவிர உழைப்பும்

அதே சமயத்தில் ஒரு விவசாயி மகாநாட்டுக்குச் சென்ற ஜவஹர்லால் நேரு வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். வீட்டுக்கு கூப்பிடு தூரத்திலேயே போலீஸார் மோட்டாரை நிறுத்தி ஜவஹர்லால் நேருவைக் கைது செய்து அழைத்துச் சென்றனர். மகனைக் காண்போம் என்று அதிக ஆவலுடனிருந்த மோதிலால் நேருவுக்கு இச்செய்தி அதிர்ச்சியை உண்டாக்கியது. மிகவும் வருந்தினுர். வருத்த மிகுதியால் ஓர்விதத் துணிவு ஏற்பட்டது. "எனக்கு

நோயேது? குணமடைந்து விட்டேனே! இனி நான் ஒரு க்ஷணமும் நோயாளியாய் இருக்கப் போவதில்லை" என்றார். இத்தீர்மானம் கம்பீரமானதே. ஆனால் அவர் உடம்பில் சத்தில்லை. என்றாலும் அவர் சட்ட மறுப்பு இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்க தீவிரமாக உழைத்தார். உழைப்பின் மிகுதியால் உடல் நிலை இன்னும் மோசமாகிவிட்டது. துப்பினால் எச்சிலுடன் ரத்தம் வர ஆரம்பித்தது. கடல் பிரயாணம் செய்வது அவசியமென நண்பர்களும் பந்துக்களும் யோசனை கூறினர். ஆனால் அவர் அவ்வாறு செய்யாமல் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள ஓரிடத்தில் ஏழு வாரங்கள் வரை தங்கினார். அதனால் உடம்பு குணமாகவில்லை. முகம் வீங்கிக் கொண்டேயிருந்தது.

## மோதிலால் நேருவின் அந்திம காலம்

இச்சமயத்தில் மகாத்மா காந்தி மோதிலால் நேருவைக் காணவந்தார். மகாத்மாவும் மோதிலாலும் ஆத்மார்த்த நண்பர்கள். மகாத்மா மோதிலாலின் குடும்ப நண்பர். அவரைக் கலக்காமல் குடும்ப விஷயமாய் மோதிலால் ஒன்றும் செய்வதில்லை. அத்தகைய நண்பரான மகாத்மாவோரிரண்டு வார்த்தை சொன்னதும் மோதிலாலுக்கு அபரிமிதமான ஆறுதல் ஏற்பட்டது. காங்கிரஸ் காரியக்கமிட்டி மெம்பர்களும் மற்ற நண்பர்களும் மோதிலாலை தரிசிக்க வந்தனர். அவர்களுடன், படுத்த வண்ணம் பேசுவது மரியாதைக் குறைவென்று நினைத்து பிடிவாதம் செய்து எழுந்து நாற்காலியில் உட்கார்ந்தார். முகம் வீங்கியிருந்தபடியால் அதிகமாய்ப் பேச முடியவில்லை. அடையாளம் கண்டு கொண்டதாக கண்ணால் சொல்லி, தலையைச் சிறிதுசாய்த்து இருகரங்களையும் குவித்து நண்பர்களை அவர் நமஸ்கரித்து வரவேற்ற காக்ஷியைப்பற்றி இன்றைக்கும் சிலாகிக்கிறார்கள்.

## ‘இந்தியாவின் கதியை என் முன்னிலையில் நிர்ணயுங்கள்’

“இந்தியாவின் கதியை சுயராஜ்ய பவனத்திலேயே நிச்சயம் செய்யுங்கள். என் முன்னிலையிலேயே உறுதி செய்யுங்கள். என் தாய் நாட்டின் கதியை நிர்ணயிக்கும் முடிவான—கௌரவமான ஒப்பந்தம் செய்யப்படுவதில் நானும் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். இறக்கவேண்டுமாயின் சுதந்திர இந்தியாவின் மடியில் இறக்க விரும்புகின்றேன்” என்பதே அவரது கடைசீ வேண்டுகோள்.

## ‘போய் வருகிறேன் மகாத்மாஜீ!’

அவரது வேண்டுகோளுக்கிணங்கிக் காங்கிரஸ் காரியக் கமிட்டி அவரது மாளிகையிலேயே கூடிற்று. பிறகு எக்ஸ்ரே வைத்தியத்துக்காக பிப்ரவரி மாதம் நாலாந் தேதி அவரை லக்ஷ்மணபுரிக்கு எடுத்துச் சென்றனர். காந்தியடிகளும் கூடவே சென்ருர். மோதிலாலின் தேகநிலை கேவலமாகிக்கொண்டே வந்தது. பிறகு அவர் வெகுநாள் உயிருடன் இருக்கவில்லை. ‘நான்போய் வருகிறேன் மகாத்மாஜீ! நான் விரைவில் போய்விடுவேன். சுயராஜ்யத்தைப் பார்ப்பதற்கு நான் இங்கே இருக்கமாட்டேன். ஆனல் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்களென்றும், சுயராஜ்யம் வெகு சீக்கிரத்திலேயே கிடைக்குமென்றும் எனக்குத் தெரியும்’ இதுவே அவர் மகாத்மாவிடம் சொன்ன கடைசீ வார்த்தை.

## மோதிலால் நேருவின் குணுதிசயங்கள்

மோதிலால் நேரு கூர்மையான புத்தியும், ஏராளமான அனுபவமும் படைத்தவர். சுதந்திர உணர்ச்சி கொண்டவர். உறுதியான உள்ளமும் பரந்த நோக்கமும்

உள்ளவர். சிறந்த காரியவாதி. வாதிப்பதில் பிரியமுடைய வர். எதிர்ப்பை சகியாதவர். வாக்குவன்மை உள்ளவர். கொடையில் கர்ணன். வணங்காமுடி மன்னன். ஆனால் மற்ற வர்களிடம் பெருமை காணப்பட்டால் அதற்கு மரியாதை செய்யத் தயங்கமாட்டார். சிறிதும் வைராக்கியம் இல்லா தவர். காந்தி ஓர் சாது அல்லது மகாத்மா என்பதற்காக அவர் மரியாதை செலுத்தவில்லை. ஓர் வீரபுருஷன் என்பதற் காகவே மரியாதை செலுத்தினர். மோதிலால் ஓர் பயில் வான். தமது தினசரி தேகப்பயிற்சியை ஒருநாளும் அவர் நிறுத்தியதே கிடையாது.

## மோதிலாலின் மரணம்

இத்தகைய மகாபுருஷன் 1931-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 6-ந் தேதி காலை காலமானர். அவரது பிரேதத்தை ஜவஹர்லாலும், ஆர். எஸ். பண்டிதரும் அலகாபாத்துக்கு அன்றைக்கே காரில் கொண்டுவந்தார்கள். மகாத்மா காந்தி அதன்பின்னல் வேறொரு மோட்டாரில் மோதிலாலின் மனைவி யான ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேருவுடன் வந்தார். மோதி லாலின் உடல் தேசீயக்கொடியால் சுற்றப்பட்டிருந்தது. திரளான ஜனங்கள் பின்தொடர பிரேதம் கங்கைக் கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மயானத்தில் மகாத்மா காந்தி சில உருக்கமான வார்த்தைகளைச் சொன்னர். இராஜப்பிரதி நிதியான இர்வின் பிரபுவும் அவரது மனைவியாரும் அனுதாபத் தந்தி அனுப்பி வைத்தார்கள். தேசம் பூராவும் துக்கத்தில் ஆழ்ந்தது. மகாத்மா காந்தி பக்கத்திலிருந்து, நேரு குடும் பத்தினரை ஆறுதலுடன் இருக்கச் செய்தார்.

## 'மோதிலால் மரணம் பொறாமைப்படத் தக்கது'

"மோதிலாலின் மரணம், ஒவ்வொரு தேசபக்தனும் பொறாமைப்படத்தக்க மரணமாகும். தம்மிட முள்ள

யாவையும் தேசத்திற்கே கொடுத்துவிட்டு கடைசிவரை நாட்டைப்பற்றியே நினைத்துக்கொண்டு மரணமடைந்தார். அவரைப்போல் சகலத்தையும் தியாகம் செய்யவேண்டாம். ஆனால் அவர் உயிருக்குயிராய் நினைத்துவந்த சுயராஜ்யத்தைப் பெறுவதற்கு வேண்டிய அளவிலாவது, நாம் ஒவ்வொருவரும் தியாகம் செய்யவேண்டும். அவ்வீரரின் தியாகத்திற்கு நம்மை அருகராக்கிக் கொள்வதற்கு அதுவே சிறந்த மார்க்கம்" என்றார் மகாத்மா காந்தி.

முத்து (மோதி) மறைந்தது என்றாலும், தன்னைவிட இன்னும் அதிகமாய்ப் பிரகாசிக்கும்படி ரத்தினத்தை (ஜவஹர்) நம்மிடையே விட்டுப் போயிருக்கிறது. அந்த ரத்தினத்தின் கீர்த்தியைப்பற்றி இனிக் கவனிப்போம்.

## ஜவஹர்லால் நேரு வரலாறு

மோதிலால் நேருவுக்கு ஜவஹர்லாலைத் தவிர வேறிரண்டு பெண்கள் உண்டு. அவர்கள் பெயர் விஜயலக்ஷ்மி நேரு, கிருஷ்ணா நேரு என்பது.

## ஜவஹர்லாலை குதிரை கீழே வீழ்த்துதல்

ஜவஹர்லால் குழந்தைப் பருவத்தில் துர்ப்பலமாயிருந்தார். வைத்தியர்களின் யோசனைப்படி காஷ்மீருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது ஜவஹர்லாலுக்கு சுமார் ஏழெட்டு வயதிருக்கும். சிப்பாய்கள் பின்தொடர அவர் குதிரை சவாரி செய்வது வழக்கம். ஓர்நாள் மாலை அவரைக் கீழே வீழ்த்திவிட்டு குதிரைமட்டும் வீடுபோய்ச் சேர்ந்தது. வெறுங் குதிரையைக் கண்டு டென்னிஸ் ஆடிக் கொண்டிருந்த மோதிலால் பயந்து நடுநடுங்கிப் போனார். விருந்துக்கு வந்திருந்த அத்தனை பேர்களும் மோதிலால் சகிதம் வெவ்வேறு வாகனங்களில் ஏறிக்கொண்டு ஜவ

ஹரைத் தேடப் புறப்பட்டனர். வழியிலேயே ஜவஹர் தென்பட்டார். தன் மகன் ஓர் வீரதீரச் செயல் செய்து விட்டதாக நினைத்து, பெருமையுடன் மோதிலால் அவரை எதிர்கொண்டழைத்தார்.

## கதை கேட்பதில் விருப்பம்

ஜவஹர் ஆங்கிலதாதிகளிடம் சிறு பிராயத்தில் கல்வி கற்றுக் கொண்டார். முபராக்அலி என்பவர் மோதிலாலின் முன்ஷீ. அவர் நேர்த்தியான கதைகளையும், 1857-ம் வருஷத்திய சிப்பாய்கலக வரலாறுகளையும் சொல்வார். அவர் பக்கத்தில் ஒண்டிக்கொண்டு ஜவஹர் மிகவும் ஸ்வராஸ்யமாக அக் கதைகளை கேட்பாராம்.

## தாயிடம் தந்தைமீது கோள் சொல்லுதல்

தகப்பனர் நண்பர்களுடன் பேசும்போதெல்லாம் ஜவஹர் திரை மறைவில் நின்று எட்டிப் பார்ப்பார். இந்த பேர்வழிகள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று அறிய அவருக்கு ஆவல் போதும்! ஒருசமயம் மோதிலால் நேரு கிளாரெட் என்ற சிவப்புச் சாராயம் குடித்துக் கொண்டிருப்பதை சிறுவன் ஜவஹர் கண்டார். அதைக் கண்டு நடு நடுங்கிப் போனர். தாயாரிடம் ஓடிப்போய் "அம்மா! அம்மா! அப்பா ரத்தத்தை குடித்துக் கொண்டிருக்கிறார் அம்மா!" என்றார்.

## மோதிலாலிடம் ஜவஹருக்கு சிம்ம சொப்பனம்

தைரியம், புத்தி, தேகவலிமை மூன்றும் சேர்ந்து உருவெடுத்தவர் தகப்பனர். அவரைப் போலவே தானும் ஆக வேண்டுமென ஜவஹர் ஆசைப்பட்டார். தகப்பனரிடம் ஜவ ஹருக்கு அன்பும் பக்தியும் உண்டு. ஆனல் அவரைக் கண்டால் சிம்ம சொப்பனந்தான். அன்பும் பக்தியும் நாளுக்கு

நாள் வளர்ந்து கொண்டே போயின. பயம் மட்டும் தீர்ந்த பாடில்லை.

## பேனாவைத் திருடிவிட்டு உதைவாங்குதல்

ஓர்தடவை ஜவஹர் தன் தகப்பனார் மேஜையில் இரண்டு பேனா இருப்பதைக் கண்டார். தகப்பனாருக்கு எதற்கு இரண்டு பேனா என்று நினைத்து ஒன்றை ஜவஹர் எடுத்துக் கொண்டு விட்டார். அன்று வீடு பூராவும் ஒரே அமளி. ஜவஹர் தான் குற்றவாளி எனத் தெரிந்ததும் மோதிலாலுக்கு அடங்காக் கோபம் வந்தது. அன்று சரியான அடி ஜவஹ ருக்கு. வலி நீங்குவதற்காக பல நாட்கள்வரை தைலம் தடவ வேண்டியதாயிற்று.

## தாய்க்கும் தனயனுக்குமே அதிகப்பொருத்தம்

தாய்க்கும் பிள்ளைக்கும் தான் பொருத்தம் அதிகம். ஒருவரோடொருவர் நெருங்கிப்பழகி அளவற்ற அன்பு பாராட்டி வந்தனர். புராணக்கதைகளை தாயார் சொல்ல ஜவஹர் சிரத்தையோடு கேட்பார். வீட்டு ஸ்திரீகள் நோன்பு கொண்டாடுவார்கள். அதில் சேர்ந்துகொள்ள ஜவஹருக்கு பிரியம் அதிகம். தாயோடு கோயில் குளத்திற் குத் தவராமல் போவார்.

## நீந்தத்தெரியாதவர்களை குளத்தில் தள்ளும் விளையாட்டு

மோதிலால் நேரு ஆனந்தபவனுக்கு குடிபோனபோது ஜவஹருக்கு பத்து வயதிருக்கும். அங்கு தோட்டமும் தடாகமும் அழகாயிருக்கும். ஆகையால் ஜவஹர் தோட் டத்தைச் சுற்றிச் சுற்றி வருவதிலும், நீந்துவதிலும் காலங் கழித்தார். நீந்தத் தெரியாதவர்களை யெல்லாம் அவர் குளத்தில் தள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பார்.

## தங்கை தம்பி பிறக்கவேண்டு மென்கிற ஆசை

போயர் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயம். ஜவஹருக்கு பத்து வயதிருக்கும். மோதிலால் நேரு அப்போது ஐரோப்பாவி லிருந்தார். வேறு எல்லோருக்கும் சகோதர சகோதரிகள் இருக்கையில் தமக்குமட்டும் இல்லையே என்று நினைத்து நீண்டகாலமாக ஜவஹர் ரகசியமாக வருந்திக் கொண்டிருந்தார். எனவே தமக்குத் தம்பியோ, தங்கையோ பிறப்பது என்பதில் அவருக்கு பரம ஆனந்தம். ஸ்வரூப ராணி நேருவுக்கு பிரசவ சமயம் வந்தது. தாழ்வாரத்தில் சிறுவன் ஜவஹர் ஆவலோடு காத்துக்கொண்டிருந்தார். அறையிலிருந்து டாக்டர் வெளியே வந்தார். ஜவஹரைப் பார்த்து "நல்ல வேளையாக உனக்கு இப்போது பிறந்துள்ளது தங்கை. தம்பியா யிருந்தால் உன் சொத்தில் பங்குக்கு வருவானல்லவா?" என்றார். இதைக் கேட்டதும் ஜவஹருக்கு கோபம் வந்துவிட்டது. 'சொத்திலே பங்கு கொடுக்க எண்ணமில்லாத பாபியா நான்? அவ்வளவு கேவலமாக போய்விட்டேனா நான்?' என்று ஜவஹர் ஆத்திரப் பட்டார். அப்போது பிறந்த தங்கையே கிருஷ்ணா நேரு.

## இங்கிலாந்தில் கல்வி

பெசண்டு அம்மையார் சிபார்சின்பேரில் ப்ரூக்ஸ் என்பவர் கூடவேயிருந்து ஜவஹருக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க நியமிக்கப்பட்டார். அவருக்கு அப்போது வயது பதினொன்று. பதின்மூன்றாவது வயதில் பிரம்ம ஞான சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து பெஸண்டம்மையாரிடம் தீக்ஷை பெற்றார். பிறகு பதினைந்தாவது பிராயத்தில் இங்கிலாந்தில் ஹாரோ என்ற பிரபல பள்ளிக் கூடத்தில் மோதிலால் நேரு அவரை அழைத்துக்கொண்டு

போய்ச் சேர்த்தார். அது பிரபுக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடம். அப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டுத் தாய்தந்தையரும் சகோதரியும் இந்தியா திரும்பினர். ஜவஹர் தன்னந்தனியாக விடப்பட்டார். அவருக்கு வீட்டு ஏக்கம் ஏற்பட்டது. அதைச் சமாளிக்க சிறிது காலமாயிற்று.

## படிப்பிற்காக பரிசுபெறல்

பொது அறிவு சம்பந்தப்பட்ட மட்டில் பள்ளியில் அவரே முதன்மையாய் விளங்கினர். திறமையான படிப்பிற்காக, இத்தாலிய வீரனும் தேசாபிமானியுமான கரிபால்டி சரிதம் ஜவஹருக்குப் பரிசாகக் கிடைத்தது. அச்சரிதத்தைப் படித்துப் பரவச மடைந்தார். ஏராளமான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பதில் ஜவஹருக்கு மிகவும் ஆசை. அவர் தலைமை உபாத்தியாயர் வீட்டிலேயே வசித்துவந்தார். அங்குதான் கபூர்த்தலா, பரோடா இளவரசர்களும் வசித்து வந்தனர். பிறகு பதினேழாவது வயதில் கேம்பிரிட்ஜிலுள்ள டிரினிட்டி கலாசாலையில் சேர்ந்து படித்தார். டாக்டர் கிச்லு, டாக்டர் சையத் மகமத் முதலியோரும் அதே கலா சாலையில் படித்தனர்.

## பேசுவதில் சங்கோசம்

மஜ்லிஸ் என்ற சங்கம் கேம்பிரிட்ஜ் இந்தியர்கள் அமைத்தது. பேசப்பழகுவதுதான் அதன் முக்கிய நோக்கம். ஆறுமாசத்துக்கு ஒருதடவையாவது பேசாத அங்கத்தினர், அபராதம் செலுத்தவேண்டும். ஜவஹரோ அடிக்கடி அபராதம் செலுத்திவந்தாரே யன்றி வாய்திறந்து ஒரு பிரசங்கமும் செய்யவில்லை. சங்கோசம்தான் அதற்குக் காரணம்.

## பெண்களைக் கண்டால் கூச்சம்

1907-ல் ஜவஹருக்கு பதினெட்டு வயது ஆரம்பமாயிற்று. கௌமார தசையின் தளைகளைக் களைந்து, வயதுவந்த

யுவ புருஷனுக தம்மை எண்ணிக் கொண்டார். கேம்பிரிட்ஜின் வீதிகளில் உல்லாசமாய் நடப்பார். தெரிந்தவர்களை சந்தித்து குஷாலாகப் பேசுவார். விடுமுறை நாட்களில் அவரது சகாக்கள் பல்வேறு விஷயங்களைப் பற்றி பண்டிதர்களைப்போல் பேசுவது வழக்கம். ஜவஹரும் அதில் கலந்து கொண்டு தாமும் வாதாடுவதில் சமர்த்தர் என்பதைக் காட்டிக் கொள்ள முயற்சி செய்தார். அம் முயற்சியில் அவமான மடையாமல் சமாளித்துக் கொண்டார். ஜவஹரும் மற்ற நண்பர்களும் ஆண் பெண் விவகாரங்களைப் பற்றி அதிக அனுபவ முள்ளவர்கள்போல் எவ்வித கூச்சமுமின்றி பேசுவார்கள். மர்ம நூல்களையும் மனோதத்துவ நூல்களையும் பற்றி பலமாக விவாதிப்பார்கள். ஆனல் இவ்வளவுக்கும் அனுபவஞானம் சிறிதளவுகூட கிடையாது. ஜவஹருக்கிருந்த இல்லற இன்பஞானம் புத்தக ஞானம்தான்.

இவ்வாறு டம்பப் பேச்சு பேசினுலும், பெண்களோடு பழகுவதில் அக் கோஷ்டியில் பெரும்பாலோருக்கு கூச்சமாகவே யிருந்தது. மற்றவர்கள் எப்படி யிருந்தாலும், ஜவஹர் இவ் விஷயத்தில் பரம கோழை. பெண்களைக் கண்டால் மயக்கந்தான். பாபம் என்ற எண்ணமும் கிடையாது. எனினும் ஜவஹரின் கூச்சமே எவ்வித விபரீதமும் நேராமல் காப்பாற்றியது.

## நார்வே நீரோடையில் ஜவஹருக்கு நேர்ந்த அபாயம்

1910-ம் வருஷம் கேம்பிரிட்ஜில் ஜவஹர் பி. ஏ. பட்டம் பெற்றதும், வேடிக்கைப் பார்க்க சில நண்பர்களுடன் நார்வேக்குப் போனர். அங்கு மலைநாட்டின் வழியாக நடந்தார்கள். போகவேண்டிய இடத்துக்கு போய்ச் சேர்ந்தபோது வியர்த்துக் களைத்து போனர்கள். அங்கு ஓர்

ஓட்டல் தென்பட்டது. குளிப்பது என்றால் என்ன என்பதையே அறியாத இடமா யிருந்தது அது. ஆதலால் ஒரு ஆங்கிலேய நண்பனைக் கூட்டிக்கொண்டு அருகிலிருந்த நீரோடையில் ஸ்நானம் செய்ய ஜவஹர் சென்றார். நீரோடை கரடுமுரடான மலைச்சரிவில் இரைச்சலிட்டுக் கொண்டு ஓடி வருவதைக் கண்டார். முதலில் ஜவஹர் தண்ணீரில் குதித்தார். ஆழமில்லை. ஆனால் குளிரோ பொறுக்க முடியவில்லை. அடித்தரை மிகவும் வழுக்கலா யிருந்ததால் ஜவஹர் கால் வழுக்கி விழுந்து விட்டார்.

குளிரினால் அவரது தேகம் உணர்ச்சியற்று விட்டது. கைகால்களை நீட்டி மடக்கவும் முடியவில்லை. தரையில் நிலைத்து நிற்கவும் முடியவில்லை. ஓடையோ அவரை வேகமாக அடித்துக் கொண்டு போகிறது. ஆங்கிலேய நண்பன் தண்ணீரிலிருந்து உடனே கரை யேறினான். கரைவழியாக ஓட்டமாக ஓடிவந்து ஜவஹரின் காலைப் பிடித்திழுத்து கரையிலே தூக்கிப் போட்டான். ஒரு கணந்தப்பி யிருந்தால் ஜவஹருக்கு மரணமே சம்பவித்திருக்கும். இன்னும் இரு நூறுகஜங்கள் ஜவஹரை அடித்துக் கொண்டு போயிருந்தால், அங்கிருந்து கீழே வீழ்ந்துக் கொண்டிருந்த நீர்வீழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டு, அவர் ஆவியை இழந்திருப்பார்.

## ஐ. ஸீ. எஸ். படிப்பை விரும்பாததின் காரணம்

ஐ. ஸீ. எஸ். தேறி உத்தியோகம் செய்தால் தங்களை விட்டுப் பிரிந்திருக்க நேரிடும் எனக்கருதி, பெற்றோர்கள் ஜவஹரை ஐ. ஸீ. எஸ். பரீக்ஷைக்கு அனுப்பவில்லை. எனவே அவர் சட்டம் படிக்கத் தொடங்கினார். தகப்பனார் தாராளமாக அனுப்பும் பணத்தை நண்பர்களோடு சேர்ந்துகொண்டு கண்டபடி செலவு செய்துவந்தார். அயர்லாந்து, நார்வே,

பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் விடுமுறை நாட்களில் போனார். அவர் ஏழுவருடகாலம் படிப்பிற்காக இங்கிலாந்தில் தங்க நேரிட்டது. இந்த சமயத்தில் இருமுறை இந்தியா சென்று பெற்றோர்களை பார்த்துவிட்டு வந்தார்.

## பாரிஸ்டராதல்

ஜவஹர் இவ்வாறு லண்டனில் படித்து பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறினார். விநாயக தாமோதர சவர்க்கார், வ. வெ. சு. அய்யர் முதலானோர் லண்டனில் இந்திய விடுதியில் இருந்த சமயம் அது. லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டதும் அப்போது தான். ஆயினும் ஜவஹர் அப்போது ராஜீய விஷயங்கள் எதிலும் கலந்து கொள்ள வில்லை. ராஜீயத்தில் பங்கெடுத்துக் கொள்ளாமற் போனு லும் திலகர் கோஷ்டியை மனதார ஆதரித்தார். வங்காளப் பிரிவினை, திலகர், லாலா லஜபதிராய் பற்றிய விஷயம் இவைக ளெல்லாம் காதுக்கு எட்ட, அவை மகத்தான உணர்ச்சியை உண்டுபண்ணி விட்டன. எல்லைப்புற காந்தியின் சகோதர ரான டாக்டர் கான்சாகிப்பும், ஸென்குப்தாவும் அப் போது தான் ஜவஹருக்கு நண்பராயினர்.

## இந்தியாவில் வக்கீல் தொழில்

ஜவஹர் 1912-ம் வருஷம் இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து சேர்ந்து அலகாபாத் கோர்ட்டில் வக்கீல் தொழில் செய்தார். மேல்நாட்டு தோரணையிலேயே வாழ்க்கை நடத்தி வந்தார். அதே வருஷம் திலகர் சிறையிலிருந்த சமயம் பங்கிபூர் காங்கிரஸ் பிரதிநிதியாகச் சென்றார்.

1915-ம் வருஷம் அலகாபாத்தில் அரசாங்கத்தின் புதிய அச்சுச் சட்டத்தை கண்டிக்க ஓர் கூட்டம் கூடியது. அப் போது அவர் சுருக்கமாக ஆங்கிலத்தில் ஓர் பிரசங்கம்

செய்தார். மோதிலால் மேடைமீது ஜவஹரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். பேச்சுத் திறமைக்காக அல்ல, தைரியத்திற்காக.

## ஜவஹருக்கு விவாகம்

பாரிஸ்டர் தொழில் நடத்தி வரும்போது 1916-ம் வருஷம் பிப்ரவரியில் டில்லியில் ஜவஹருக்குத் திருமணம் நடந்தது. மணப் பெண்ணான கமலா நேருவின் பெற்றோர் செல்வந்தர். மணமகன் ஜவஹரோ மோதிலால் நேருவின் ஏகபுத்திரர். பின்பு கேட்பானேன்! டில்லியில் விவாகமும் விருந்தும் ஏக தடபுடலாக நடந்தேறின.

## பனிமலையில் நேர்ந்த பேராபத்து

ஜவஹருக்குக் கல்யாணம் முடிந்து கோடைகாலம் வந்தது. கோடையைக் கழிக்க ஜவஹர் தமது ஒன்று விட்ட சோதரரை அழைத்துகொண்டு மலைமீதேறி அங்கு பல வாரங்கள் வரை தங்கினர். அவர்கள் சென்றது ஒடுக்கமான பள்ளத்தாக்குப் பாதை. இரு புறங்களிலும் மலைகள். மலைச் சிகரங்களில் அடர்ந்திருந்த பனி சிறிது சிறுதாகக் கறைந்து அவர்களது காலடியில் வந்து விழுந்தன. காற்றே பலமாக வீசியது. இங்கிலையில் சோஜீலா கணவாயைத் தாண்டி மாதாயான் என்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் போகவேண்டிய இடம் அமர்நாத் குகை. ஆனல் அதற்கிடையில் ஓர் நீண்ட மலை படுத்துக் கொண்டிருந்தது. அம் மலை ஒரே பனிமயமா யிருந்தது. பனிமலைச் சரிவுகளில் கயிறுகளைப் பிடித்துக்கொண்டு மலைமீது ஏறினார்கள். அப்போது அவர்கள் 16000 அடி உயரமுள்ள மலை மீதிருந்தார்கள்.

ஒவ்வொரு அடி யெடுத்து வைக்கும்போதும் மூச்சு வாங்க ஆரம்பித்தது. உறைந்த பனிக்கட்டிகள் வழுக்க

ஆரம்பித்து விட்டன. இடையிடையே குன்றுகள்மீது இருந்த பனி மூட்டங்களால் எங்கே ஆபத்து இருக்கிற தென்று அறியக்கூட வில்லை. ஒரு புதிய பனிக்குன்றிலே ஜவஹர்லால் காலை வைத்தார். அது உடைந்து போய், தனது பேய் வாயைத் திறந்து கொண்டிருந்த குகைக்குள் ஜவஹர் விழுந்துவிட்டார். அதில் போனவர்கள் கதி அதோகதி தான். நல்ல வேளையாக ஜவஹர் பிடித்துக் கொண்டிருந்த கயிறு அறுந்து போகவில்லை. ஆகையால் அந்த பிலத் துவாரத்தின் கங்கிலே தொத்திக் கொண்டிருந்தார். கூட வந்தவர்கள் கயிற்றைப் பிடித்து ஜவஹரை வெளியே இழுத்து விட்டார்கள். எல்லோருக்கும் ஏக்கமும் சோர் வும் அதிகமாயிற்று. அமர்நாத் குகையை காணமுடியா மலேயே திரும்பிவிட்டனர். திபேத்துக் கருகிலுள்ள மானஸரோவர் என்கிற தெய்வீகமான ஏரியையும் கைலாச கிரியையும் காணவேண்டு மென்பதே ஜவஹரின் ஆவல். எனினும் அவ்வெண்ணம் இதுவரை கைகூடவில்லை.

## காந்தி - ஜவஹரின் முதல் சந்திப்பு

அதே வருஷம் லக்ஷ்மணபுரி காங்கிரஸ் சமயத்தில் காந்தி யடிகளைமுதன் முதலாக சந்தித்தார். வக்கீல் தொழில் ஜவஹ ரின் மனதுக்கு பிடிக்கவில்லை. பொது ஜன சேவை செய்ய விரும்பினர். ஹோம்ரூல் இயக்கத்திலும், காந்தியடிகளின் ரௌலட் சட்டக் கிளர்ச்சியிலும் ஈடுபட்டார்.

## மோதிலாலை எதிர்த்து ஜவஹரின் குரல்

1917-ம் வருடத்தில் ஹோம்ரூல் கிளர்ச்சியை யொட்டி பெஸண்டம்மையார் சிறைப்பட்டார். அச்சமத்தில் ஐக் கிய மாகாணத்தில் மோதிலால் நேருவின் தலைமையில் ஓர் மகாநாடு நடந்தது. மோதிலால் நேரு சர்க்காரைக் கண்டித்

தார். ஆயினும் "பிரிட்டிஷார் மிகவும் நியாயஸ்தர்கள். அவர்களை பரிபூர்ணமாய் நம்பவேண்டும். இந்தியாவைப் பற்றி அவர்களே முடிவாய் தீர்மானிக்கவேண்டும்' என்றெல்லாம் பேசினர் 'அது சரியல்ல' என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் கிளம்பியது. மோதிலால் நேரு கடுங்கோபங் கொண்டார். தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றி மேஜை மீது வைத்துவிட்டு, 'அதுயார் அது? அப்படி ஆக்ஷேபிப்பது?' என்று அதிகார தோரணையில் கேட்டார். பழைய குரல் மீண்டும் ஆக்ஷேபித்தது. 'ஆக்ஷேபிப்பவர் பகிரங்கமாக வரட்டுமே! ஏன் பதுங்க வேண்டும்?' என்றார் மோதிலால். ஆக்ஷேபணைக் குரல் ஜவஹர்லாலுடையதே. தகப்பனாரை நேரில் எதிர்க்க விரும்பாமல் அவர் அவ்வாறு செய்தார். தந்தையின் மித வாதப் போக்கு மைந்தனுக்குப் பிடிக்கவில்லை.

## தீவிர தேசத் தொண்டில் ஈடுபடல்

1919-ம் வருஷம் பஞ்சாப் படுகொலையைப் பற்றி விசாரிக்க காங்கிரஸ் ஓர் கமிட்டியை நியமித்தது. அக் கமிட்டியின் வேலைகளில் ஜவஹர்லால் மிகவும் ஈடுபட்டார். இச்சம்பவத்திற்குப் பிறகும் அவர் வக்கீல் தொழில் நடத்த விரும்பவில்லை. தேசத்தொண்டில் ஈடுபட அவர் மனம் நாட்டங் கொண்டது.

## வெய்யிலில் வயல்களில் நடந்து செல்லுதல்

நாடு விடுதலை யடைய வேண்டுமானல் விவசாயிகள் முன்னேற்றமடைய வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தார். ஆகவே அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டார். வீட்டில் பேசுவது போலவே மிகவும் சுலபமான நடையில் அவர்களிடம் பேசி தன் கருத்தை அடிக்கடி வெளியிட்டு வந்தார். ஒருபோதும் நடந்து

பழக்கமறியாத அவர் வயல்களில் வெய்யிலேயும் பாராது மைல் கணக்காக நடந்து சென்று கிராமங்களில் கூட்டம் கூட்டிப்பேசினர்.

## தகப்பனாரை தன் வழிக்குத் திருப்புதல்

1920-ம் வருஷம் நடந்த விசேஷ காங்கிரஸில் ஒத்துழையாமைத் தீர்மானம் வரும்போது முதலில் அதை மோதிலால் நேரு எதிர்த்தார். தமது தகப்பனார் அவ்வாறு செய்தது ஜவஹர்லாலுக்கு வருத்தத்தை உண்டாக்கியது. கடைசியில் எப்படியோ தகப்பனார் அத் தீர்மானத்தை ஒப்புக்கொள்ளும் படிச் செய்து விட்டார்.

## அறையைப் பெருக்கி துணி தோய்த்தல்

மகாத்மா காந்தியிடம் பரிபூர்ண நம்பிக்கை கொண்டு அவரது ஒத்துழையாமை திட்டத்தை நிறைவேற்றி வைக்க முயற்சித்தார். அதன்பயனாக 1921-ம் வருஷம் அவர் முதல் முதலாக சிறைபுக நேர்ந்தது. அவரது தந்தையும் சிறை படுத்தப்பட்டார். இருவரும் லக்ஷ்மணபுரி சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். தினந்தோறும் காலேயில் எழுந்தவுடன் தகப்பனாருடைய அறையையும் கூட்டி மெழுகுவார். தமது துணிகளோடு தகப்பனாரின் துணிகளையும் தாமே துவைத்துக் காயவைப்பார். எவ்வித அந்தஸ்து இல்லாவிடினும் தன் துணியை தானே துவைத்துக் கொள்வது கேவலம் என்று நினைக்கின்றார்கள் இக்காலத்துச் சிறுவர்கள். ஜவஹரோ பெரிய குடும்பத்தில் பிறந்தவர். சீமையிலே படித்தவர். மேனாட்டு நாகரீகத்தில் மூழ்கி அங்குள்ள பழக்க வழக்கங்களை வெகுநாள்வரை அனுஷ்டித்தவர். அப்படி யிருந்தும், வீண் பொய்க் கௌரவம் பாராட்டவில்லை. அவரவர் தத்தம் வேலையை செய்து கொள்வதில் கௌரவக் குறைவு ஒன்றுமில்லை என்பதை தமது செய்கைமூலம் நடத்திக் காட்டினர்.

## நிர்மாண திட்டத்தில் நாட்டம்

சிறையிலிருந்து வெளிவந்து பார்த்தால் நாட்டில் ஊக்கம் குன்றி யிருந்தது. சுயராஜ்யக் கக்ஷி ஏற்பட்டு சட்ட சபைப் பிரவேசத்தை ஆதரிப்பதையும், ராஜாஜீ முதலியோர் தலைமையில் மாறுதல் வேண்டாத கக்ஷியார் அதை எதிர்ப்பதையும் கண்டார். சுயராஜ்ய கக்ஷியின் திட்டத்தில் அவருக்கு சிறிதும் நம்பிக்கையோ பற்றோ கிடையாது. என்றாலும் அவர் அக்கக்ஷியை எதிர்க்கவில்லை. மாறுதல் வேண்டாத கக்ஷியில் சேர்ந்து சுயராஜ்ய கக்ஷிக்கு எதிரிடையாக தீவிரப் பிரசாரம் செய்யவுமில்லை. அவர் இரண்டு கக்ஷியிலும் சேராமல் காங்கிரஸின் நிர்மாண திட்டங்களை நிறைவேற்றுவதில் ஈடுபடுவதெனத் தீர்மானித்தார்.

## அலகாபாத் நகரசபைத் தலைமைப் பதவி

1923-ம் வருஷம் அவர் அலகாபாத் நகர சபைக்குத் தலைவரானார். ஆனால் இரண்டு வருஷம் கழித்து அப்பதவியை ராஜிநாமா செய்தார். அவர் நகர சபைத் தலைவரா யிருந்த சமயத்தில் செய்த சிறந்த தொண்டைப்பற்றி அரசாங்கமும் வானமளாவப் புகழ்ந்தது.

## அண்டிப் பிழைப்பதில் அருவருப்பு

செலவுக்கு தகப்பனாரை அண்டியிருக்க வேண்டி யிருக்கிறதே என்று ஜவஹர்லால் வருந்தினார். இந் நிலையில் பல கம்பெனிகள் அவரை உத்தியோகத்திற்கு அழைத்தன. அவரது பெயரை உபயோகித்து அதிக லாபம் சம்பாதிக்கவே அவை விரும்பின. இதனை உணர்ந்த ஜவஹர்லால் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. வக்கீல் தொழிலோ ஏற்கனவே வெறுப்பு. அவர் தம் நிலைமையைப் பற்றி தகப்பனாரிடம் விளக்கமாகப் பிரஸ்தாபித்தார். மோதிலால் அதைக் கேட்டுச்

சிரித்தார். "நான் இருக்கும்போது நீ ஏன் சம்பாதிக்க வேண்டும்? உனக்கும் உன் மனைவிக்கும் ஒரு வருஷம் முழுதுக்கும் தேவையான பணத்தை இரண்டே நாளில் நான் சம்பாதித்துக் கொடுக்க முடியுமே! நீ ஏன் வீணாக கவலைப் படுகிறாய்?" என்றார். இவ்வாறு கூறி தமது பிள்ளையைத் தகப்பனார் சமாதானப்படுத்தினார்.

## நாபா சமஸ்தானத்தில் கைதியாதல்

1923-ம் வருஷம் நாபா சமஸ்தானத்தை விட்டு வெளியேற வேண்டுமென ஜவஹருக்கு உத்திரவிடப் பட்டது. அவர் அதை மீறவே போலீஸார் அவரைக் கைது செய்து வீதி வழியாக நடத்திச் சென்றனர். "மோதிலாலையும் ஜவஹரையும் சட்ட மறுப்புக்காக கைது செய்து அலகாபாத் வீதி வழியாக அழைத்துச் செல்வதை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று மகாத்மா காந்தி 1921-ம் வருஷம் 'யங் இந்தியா' என்கிற தமது பத்திரிகையில் எழுதியிருந்தார். மகாத்மாவின் அத்தகைய எண்ணம் ஒருவாறு நிறைவேறிவிட்டதாக ஜவஹர்லால் மகாதேவ தேசாய்க்கு எழுதினார். நாபா அரசாங்கம் அவருக்குக் கடுமையான தண்டனை விதித்தபோதிலும் சில தினங்களிலேயே விடுதலை செய்துவிட்டது.

## கமலா நேருவின் சிகிச்சைக்காக மேல்நாடு செல்லுதல்

கமலா நேருவின் தேகநிலை சீர் கெட்டிருந்தது. அதன் காரணமாக அவரை அழைத்துக் கொண்டு 1926-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஐரோப்பாவுக்கு புறப்பட்டு வெனிஸ் நகரத்தை அடைந்தார். ஜவஹர்லாலின் சகோதரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியும் அன்னாருடைய கணவர் ஸ்ரீ. ஆர். எஸ்.

பண்டிட் அவர்களும் கூடவே போனார்கள். அப்போது பிரஸல்ஸ் நகரில் நடந்த ஏகாதிபத்திய மகாநாட்டுக்கு அவர் ஒருநாள் தலைமை வகித்தார். பிறகு ரஷ்யா சென்று அரசாங்க விருந்தினரா யிருந்தார். அவர் நாடெங்கும் சுற்றி, ரஷிய நாட்டு அரசியல் முறைகளைத் தெரிந்து கொண்டார். இந்தத் தடவை அவர் தமது ஐரோப்பாப் பிரயாணத்தினால் மேல் நாட்டு அரசியல் விஷயங்களில் அதிக ஞானமும் அனுபவமும் பெற்றார். பிறகு 1927-ம் வருஷம் டிசம்பர் மாதம் சென்னை காங்கிரஸுக்கு நேராக ஐரோப்பாவிலிருந்து வந்து சேர்ந் தார்.

## லங்கை, தென்னாடு பிரயாணம்

1927-ம் வருஷம் ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்த பின்னர், ஜவஹர்லால் கமலா நேருவையும் இந்திரா நேருவையும் அழைத்துக் கொண்டு லங்கை சென்றார். பிறகு அங்கிருந்து திருவாங்கூர், கொச்சி, மலையாளம், மைசூர், ஹைதராபாத் முதலிய சமஸ்தானங்கள் வழியாகப் பிரயா ணம் செய்தார்.

## ஸைமன் கமிஷனும் ஜவஹரின் தடியடி யனுபவமும்

ஸைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தது. லாலா லஜ பதிராய் அச்சமயம் போலீஸாரால் அடிக்கப்பட்டு இறந் தார். அது காரணமாக ஸைமன் கமிஷன் எந்த இடத் துக்குப் போனாலும் மக்கள் ஏகோபித்து அதை பகிஷ்க ரித்தனர். லக்ஷ்மணபுரிக்கும் ஸைமன் கமிஷன் வருவதா யிருந்தது. அப்போது ஜவஹர்லால் நேரு லக்ஷ்மணபுரிக்குச் சென்றார். ஊர்வலங்களும், மற்ற பகிஷ்கார வேலைகளும் நடைபெறக்கூடாதென அதிகாரிகள் உத்திரவு போட்டனர்.

வீதிகளில் போக்கு வரத்துக்குத் தடை யேற்படுவதாக காரணம் சொல்லப்பட்டது.

ஜவஹர்லால் பதினறுபேர் கொண்ட கூட்டத்திற்கு தலைமை வகித்தார். சந்தடியில்லாத வீதிகள் வழியாக ஊர் வலம் செல்லவேண்டுமென திட்டம் செய்து கொண்டார். வழியில் ஈ காக்கைகூட இல்லை. திடீரென கூட்டத்திற்குப் பின்னல் குதிரைகளின் காலடிச்சத்தம் கேட்டது. அப்படை யில் மூன்று டஜன் பேர்கள் இருந்தார்கள். ஜவஹர்லாலின் கோஷ்டியை வளைத்துக் கொள்ள விரைவாக குதிரைப்படை வந்து கொண்டிருந்தது. நெருங்கி வந்து அக்கூட்டத்தி னிடையே குதிரைகளை விட்டு ஓட்டியதால், ஜவஹரின் கோஷ்டியினர் கலகலத்துப் பிரிந்துபோக நேர்ந்தது. பிறகு பெரிய குண்டாந்தடிகளைக் கொண்டு குதிரைப் படையினர் அக் கோஷ்டியினரை அடிக்கவும் ஆரம்பித்தனர். சில தொண்டர்கள் அடியினின்று தப்பித்துக்கொள்ள ஒதுங்கிக் கொண்டார்கள். அவர்களை அப்போதும் போலீஸார் விட்ட பாடில்லை. துரத்திச் சென்று அடித்தார்கள்.

குதிரை பாய்ந்து வருவதைப் பார்த்து பத்திரமாக ஏதேனும் ஓரிடத்திற்குச் செல்ல வேண்டுமென ஜவஹர்லா லும் ஆசைப் பட்டார். தொண்டர்கள் அடிபடும் கோரக் காக்ஷியைக் கண்டு, தலைமறைவாய்ப் போய் விடலாமென்று கூட எண்ணினர். அவ்வளவு தூரம் மனக் கலக்கத்தை உண் டாக்கக்கூடிய காக்ஷியா யிருந்தது அது. இருந்தாலும் இடத்தை விட்டு நகரக்கூடா தென்கிற பிடிவாதமும் கூடவே அவருக்கு இருந்து வந்தது. அவ்விடத்தை விட்டு நகருவது கேவலமான காரியம் என்று முடிவு செய்து கொண்டார். இவ்வாறு இரண்டுநிமிஷம் வரையில் ஜவஹரின்

மனதிலே போராட்டம் நிகழ்ந்ததாம். ஆனால் அவர் கடைசி வரையில் இருந்த இடத்திலேயே உறுதியுடன் நின்றார்.

குதிரைப் படை போலீஸ்காரன் ஒருவன் நீண்ட தடியைச் சுழற்றினான். ஜவஹரின் முதுகில் ஓசை கேட்கும் படி இரண்டு அடி பலமாக விழுந்தது. தடியடியைத் தாங்கிக் கொள்ளக்கூடிய உடல் வலிமை பெற்றவன் என்கிற பெருமையில் வலியையும் அவர் மறந்து விட்டார். இச் சம்பவம் போலீஸாருக்கும் காங்கிரஸ்காரருக்கும் ஸைமன் கமிஷன் பகிஷ்கார சம்பந்தமாக முதல்நாள் நடந்த ஒத்திகையே யாகும்.

இது நடந்த மறுநாளே ஸைமன் கமிஷன் லக்ஷ்மண புரிக்கு வந்தது. அன்றும் ஊர்வலத்தை போலீஸார் தடுத் தனர். எல்லோரையும் அடித்தனர். முகத்திலே அடிவிழாத படி காப்பாற்றிக்கொள்ள ஜவஹர் கையைத் தூக்கினாரே தவிர வேறொன்றும் செய்யவில்லை. முகத்தையும் தலையையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆசையினாலேயே அவ்வாறு செய்தார். ஜவஹர்பேரில் சரமாரியாக அடிவிழுந்து கொண்டிருந்தது. அச்சமயத்தில் பின்னே இருந்து யாரோ அவரை குண்டுகட்டாகத் தூக்கிக் கொண்டுபோய் விட் டார்கள். அச் செய்கை ஜவஹருக்குப் பிடிக்கவில்லை. போலீஸார் ஜவ்ஹரைக் குறிவைத்து அடிக்க முயலுகின் றனர் என்று எண்ணியே அவரது இளந் தோழர்கள் இவ்வாறு தூக்கிக் கொண்டுபோய் அவரைக் காப்பாற்றத் தீர்மானம் செய்து விட்டார்கள். இவ்வளவு தொல்லைக்கும் காரணமா யிருந்த ஸைமன் கமிஷன் இரகசியமாய் வேறு வழியாக எங்கோ போய்விட்டது. ஜவஹருக்கு உடம்பு முழுதும் ஊமைக் காயங்களும் தழும்புகளும் நிறைந் திருந்தன.

## மீண்டும் தகப்பனரை எதிர்த்தல்

1928-ம் வருடம் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் மோதிலால் நேரு குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஆதரித்துப் பேசினர். ஜவஹர்லால் தமது தகப்பனரை எதிர்த்து, பூரணசுயராஜ்யம் வேண்டுமென்றார்.

## நிகரற்ற மைந்தன்

1929-ம் வருஷம் லாகூர் காங்கிரஸுக்கு ஜவஹர் தலைமை வகித்தார். மோதிலால் தமது மாளிகையான ஆனந்த பவனை காங்கிரஸுக்குத் தானமளிக்க, அக்கிராசனர் என்கிற முறையில் ஜவஹர்லால் அதை ஏற்றுக் கொண்டார். வேறு எந்த பிள்ளையாவது தனக்கு உரிமையுள்ள சொத்தைத் தன் தகப்பனர் தானம் செய்வதை பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா? தன் கையாலே அதைப் பெற்று தனக்கில்லாமல் தானம் செய்ய சம்மதிக்குமா? ஆனல் ஜவஹரின் உதாரணம் இணையற்ற தாயிருக்கிறது. அவரது பற்றற்ற வாழ்வும், சிறந்த தேசபக்தியும், தியாகபுத்தியும் இதிலிருந்து நன்கு வெளியாகிறது.

## கசையடியைக் கண்டித்து சிறையில் பட்டினி கிடத்தல்

1930-ம் வருஷம் ஏப்ரலில் மகாத்மா காந்தி உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கியபோது ஜவஹர்லால் நேரு முதலிலேயே சிறைபுகுந்தார். சிறையில் கசையடி அடிப்பதைக் கண்டிப்பதற்கு அடையாளமாக மூன்று நாள் சிறையில் பட்டினியிருந்தார். சில மாதங்கள் கழித்து ஸ்ரீமதி கமலா நேருவும் சிறைப்பட்டார். பிறகு காங்கிரஸுக்கும் சர்க்காருக்கும் 1931-ம் வருடம் மார்ச்சு மாதம் ஐந்தாம் தேதி ஒப்பந்த மேற்பட்டது. இவ்வொப்

பந்தம் ஜவஹருக்குப் பிடிக்கவில்லை. ஆயினும் அவர் அதை எதிர்க்கவில்லை. தேசீய மகாசபையின் பொதுக் காரிய தரிசியா யிருந்து வேலை பார்த்து வந்தார். ஐக்கிய மாகாணத் திய விவசாயிகளின் நன்மைக்கான வழிகளில் உழைக்கத் தலைப்பட்டார்.

## ஜவஹரின் தாயார் பிரம்படிபட்டு மூர்ச்சையாதல்

1931-ம் வருஷம் ஏப்ரல் மாதம் தேசீய வாரத்தில் அலகாபாத்தில் ஸ்வரூபராணி நேருவின் தலைமையில் ஓர் ஊர்வலம் நடந்தது. போலீஸார் அந்த ஊர்வலத்தைத் தடுத்து தடியடிப் பிரயோகம் செய்தனர். யாரோ நாற்காலி கொண்டுவந்து போட, ஸ்வரூபராணி நேரு ஊர்வலத்தின் முன்னணியில், ரஸ்தாவில் நாற்காலியில் உட்கார்ந்தார். போலீஸார் ஸ்வரூபராணி நேருவை நாற்காலியிலிருந்து கீழே தள்ளி, இடைவிடாமல் பிரம்பால் அடித்தனர். அவருக்கு தலையில் காயமேற்பட்டு ரத்தமும் பெருகிற்று. அவர் மூர்ச்சையற்று ரஸ்தாவில் கிடந்தார். பிறகு அவரைத் தூக்கி தமது காரில் வைத்துக் கொண்டு போலீஸ் அதிகாரி யொருவர் ஆனந்தபவனம் சேர்ந்தார்.

## வருமானவரி கட்ட மறுத்ததால் ஜப்தி

1931-ம் வருஷம் மோதிலாலுக்கு வந்த வருவாயின் பேரில் வரி விதிக்கப்பட்டது. சட்டமறுப்பு இயக்கத்தால் அவர் அவ்வருஷம் ஒன்றும் கொடுக்கவில்லை. அவர் இறந்த பிறகு ஜவஹர்லால் ஒருதவணை செலுத்தினார். என்றாலும் வருமானவரி கொடுப்பதே தவறு என்று அவருக்குத் தோன்றியது. 'கிஸ்தியை நீங்கள் கொடுக்கவேண்டாம்' என்று விவசாயிகளிடம் சொல்லிவிட்டு, தான் மாத்திரம் வருமான வரி கொடுப்பது தவறென நினைத்தார். ஆகை

யால் அவர் வருமான வரி கொடுக்க மறுத்தார். அதற்காகப் பல மாதங்கள் கழித்து அவருக்குச் சொந்தமான ரயில்வே பங்குகளை போலீஸார் ஜப்தி செய்தனர். அவரது மோட்டாரும் ஜப்தி செய்து விற்கப்பட்டது.

## புரக்ஷி வாலிபர்கள் ஜவஹரை எச்சரித்தல்

1931-ம் வருஷம் நவம்பர் மாதம் ஜவஹர்லால் கல்கத்தாவுக்குச் சென்று சில நாட்கள் வரை தங்கினர். அவ்வூரைவிட்டுப் புறப்பட விருந்த தினத்தன்று மாலை நேரத்தில் இரண்டு வாலிபர்கள் ஜவஹரைக்காண வந்தனர். அவர்களுக்கு வயது இருபதுக்குள்ளாகவே இருக்கும். பயங்கர பலாத்கார முறைக்கு விரோதமாக பிரசாரம் செய்ததற்காக ஜவஹரிடம் அவர்கள் ஆத்திரப் பட்டார்கள். ஜவஹரும் அவ்விளைஞர்களும் சிறிது நேரம் வாதித்தார்கள். ஜவஹரின் குரலும் கோபமும் உச்சநிலைக்குப் போய்விட்டன. கடைசியில் அவ்வாலிபர்கள் ஜவஹரை விட்டுப் பிரியும்போது "இதே மாதிரி எதிர் காலத்திலும் நீங்கள் நடந்து கொள்வீர்களாளுல், மற்றவர்களைச் செய்வது போலவே உங்களையும் செய்து விடுவோம். எங்கள் வழிக்கு நீங்கள் வரவே கூடாது. நாங்கள் இனியும் பொறுத்திருக்க மாட்டோம்" என்று எச்சரித்து விட்டுப் போயினர்.

## காங்கிரஸ் ஒன்றுதான் எனக்கு உத்திரவிடலாம்!

1931-ம் வருஷம் டிசம்பர் 15-ந் தேதி யன்று ஆனந்த பவனில் ஜவஹரின் அறைகளை போலீஸார் சோதித்தனர். அவர் அலகாபாத் முனிசிபல் எல்லையைவிட்டு போகக் கூடாது என்று ஜில்லா மாஜிஸ்டிரேட் கட்டளை யிட்டார்.

"நான் காங்கிரஸ் ஸ்தாபனத்தைத் தவிர வேறெவரிடமிருந்தும் உத்திரவு பெறுவதோ, அதற்குக் கீழ்படிந்து

நடப்பதோ கிடையாது. காங்கிரஸ் ஒன்றுதான் எனக்கு உத்திரவிடலாம். வேறெந்த உத்திரவையும் நான் லக்ஷியம் செய்வதில்லை. என் கடமையை நிறைவேற்ற முடியாமல் தடுக்கும் எதற்கும் நான் இணங்கவே மாட்டேன்" என்று ஜவஹர்லால் பதிலளித்துவிட்டார்.

## மகாத்மா சீமையிலிருந்து வருவதற்குள் ஜவஹர்லால் கைதியாதல்

பம்பாயில் காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கூட்டம் நடைபெறுவதாயிருந்தது. அதற்காகப் புறப்பட்டுப் போகும் போது அலகாபாத்துக்கு அருகிலுள்ள இராதக்கஞ்சு ரயில்வே ஸ்டேஷனில் வண்டியை நிறுத்தி போலீஸ் உத்தியோகஸ்தர் ஜவஹர்லாலைக் கைது செய்தார். இதைப் பற்றிய தகவல் ஆகாயதந்திமூலம் அனுப்பப்பட்டும், கப்பலில் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த மகாத்மாவுக்கு கிடைக்காமற் செய்யப்பட்டது. ஜவஹர்லால் நேரு கைதியான செய்தி மகாத்மா காந்திக்கு, பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்த பிறகே தெரிய வந்தது. அவர் மிகவும் வருந்தினார். கோவிந்த வல்லப பந்த் மூலம் ஜவஹர்லால் அனுப்பியிருந்த கடிதத்தை வாங்கி மகாத்மா ஆவலாகப் படித்தார். தமக்கு நடத்தப்பட்ட ராஜோபசாரத்தில் அவர் மனம் செல்லவில்லை. அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஏற மறுத்தார். வேறு மோட்டாரில் ஏறிக்கொண்டு, அதையும் வேகமாக ஓட்டச் சொன்னார். ஜவஹர்லால் நேரு கைதியானது மகாத்மாவினிடம் இவ்வளவு மாறுதலை ஏற்படுத்தியது.

## தாயும் தனயனும் பிரியும் காக்ஷி

1932-ம் வருடம் ஜனவரி மாதம் 4-ந் தேதி விடியற்காலை 4-மணிக்கு நைனிடால் சிறையில் ஜவஹரின் விசாரணை

45010

நடந்தது. இரண்டு வருடம் கடினக் காவல் என்று மாஜிஸ்டிரேட் சொல்ல, ஜவஹர்லால் நேரு புன்சிரிப்புடன் தண்டனையை ஏற்றுக்கொண்டு மாஜிஸ்டிரேட்டுக்கு வந்தனமளித்தார். வழக்கு முடிந்ததும் ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேரு தன் மகன் ஜவஹரை ஆலிங்கனம் செய்துகொண்டு விடைபெற்றுக் கொண்டார். இக்காக்ஷி எல்லோர் மனத்தையும் இளக்கியது.

## சிறையில் பலவித ஜந்துக்களுடன் பரிச்சயம்

1931, 1932-ல் டேராடூன் சிறையில் ஜவஹர் மொத்தம் பதினாலரை மாதங்கள் இருந்தார். அவருக்கும் மூட்டைப் பூச்சி, கொசு, ஈ முதலியவைகளுக்கும் இடைவிடாமல் போர் நடந்து கொண்டே யிருக்கும். அவரது அறையில் நூற்றுக் கணக்கான குளவிகளும் இருந்தன. ஒரு சமயம் ஓர் குளவி அவரைக் கொட்டிவிட்டது. வௌவால்களைக் கண்டால் ஜவஹருக்கு வெறுப்பு. அவைகள் மாலையில் வெளிச்சம் மறைகிற சமயத்தில் சத்தம் செய்யாமல் அவரது அறைக்கு வந்து அங்கு மிங்கும் பறக்கும். அவைகள் அவரைத் தொட்டுக் கொண்டு போவதுபோல் தோன்றும். எறும்புகளையும், கரையான்களையும், மற்ற பூச்சிகளையும், மணிக்கணக்காய் கவனித்துக் கொண்டிருப்பார். பல்லிகள் இரையில் குறி வைத்து சத்தம் போடாமல் நகருவதையும் வாலை ஆட்டி கொண்டு வேட்டையாடுவதையும் பார்த்துக் கொண்டே யிருப்பார்.

## ஜவஹர் மரமல்ல என்பதை அணில் அறிதல்

ஜவஹர் சிறைச்சாலையில் அநேக மணி நேரம் வரை அசையாமல் உட்கார்ந்து கொண்டே படிப்பார். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு அணில் அவரது கால்கள்மீது

ஏறி முழங்காலில் உட்கார்ந்து கொண்டு நாலாபுறமும் பார்த்தது. பிறகு அவரது கண்களைப் பார்த்து விட்டு அவர் மரமல்ல என்று தெரிந்து கொண்டது போலும்! அவரை எதுவாக அது நினைத்துக் கொண்டதோ தெரியவில்லை. உடனே பீதியடைந்து ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்ற பிறகு நாலுகால் பாய்ச்சலாய் பாய்ந்து விட்டது. இவ்வாறு மிருகங்களோடு பழகும் படியான சந்தர்ப்பம் ஜவஹருக்குக் கிடைத்தது. அவருக்கு எப்போதும் நாய்களின் பேரில் தான் ரொம்பவும் பிரியம். அவர் வெளியில் இருக்கும் போது நாய்களை வளர்த்துவந்தார்.

## தாய்க்கு அபாயம்; தங்கைக்கு விவாகம்

1933-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 30-ந் தேதி ஜவஹரின் தாயார் ஸ்வரூபராணி நேருவின் தேகநிலை அபாயமாகியது. அதை உத்தேசித்து விடுதலை தினத்திற்கு முன்பே ஜவஹர் விடுதலை செய்யப்பட்டார். அக்டோபர் மாதம் மூன்றும் வாரத்தில் அவரது தங்கை கிருஷ்ணா நேருவுக்கும் ஹாதீ சிங்கிக்கும் ரிஜிஸ்டர் கலியாணம் நடந்தேறியது.

## பீஹார் பூகம்ப சமயத்தில் மண்வெட்டி எடுத்து வெட்டுதல்

1934-ம் வருஷம் ஜனவரியில் பீஹாரில் பூகம்பம் ஏற்பட்டது. ஜவஹர்லால் பாட்னா சென்று ஒருவாரம் தங்கி சகல இடங்களையும் பார்வையிட்டார். அவரே கையில் மண் வெட்டி எடுத்துக் கொண்டு மண்மேடுகளை வெட்டி அப்புறம் தள்ளி, சொந்த சக்தியால் ஜனங்கள் வேலைசெய்ய வேண்டு மென்பதற்கு ஊக்கம் கொடுத்தார். பிப்ரவரி 12-ந் தேதி யன்று ஆனந்த பவனில் தேநீர்ப் பானம் பருகிக்

கொண்டிருந்தபோது ராஜீய காரணத்துக்காக அவர் கைது செய்யப்பட்டார். கல்கத்தா கோர்ட்டில் விசாரணை நடந்து இரண்டு வருஷ தண்டனை கிடைத்தது. டேராடூன் சிறைக்கு கொண்டுபோகப் பட்டார்.

## தூக்கத்தில் கத்துதல்

கமலா நேருவின் நோயும், அரசியல் கவலைகளும் அவருக்கு மனத்துயரத்தை உண்டாக்கின. நரம்புகள் கெட்டுப்போயின. நல்ல தூக்க மில்லை. இந்நிலைமையில் ஒரு சமயம் தூக்கத்தில் உரக்கக் கத்தினார். கண்விழித்துப் பார்த்தால் அவரது படுக்கையருகில் ஜெயில் வார்டர்கள் இருவர் கவலையுடன் நிற்கிறார்கள்.

## விசித்திர கனவும் நித்திரையில் அழுதலும்

மற்றொரு சமயம் கோடைகாலம். ஜவஹர் பகலில் தூங்கி விட்டார். எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கான் நாலா பக்கங்களிலிருந்தும் தாக்கப்படுவதாயும், அவரைக் காப்பதற்காக தாம் சண்டை போடுவதாயும் கனவு கண்டார். கண்விழித்தார். உடல் தளர்ச்சியடைந்தது. மனதிலே தாங்கமுடியாத துயரம் உண்டாயிற்று. அவருடைய தலையணை கண்ணீரால் நனைந்திருந்தது. இது அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணியது. ஏனெனில் விழித்திருக்கும் எந்த சமயத்திலும் கண்ணீர் பெருக்கு அவருக்கு ஏற்பட்டதே யில்லை.

## ஜவஹரின் திடீர் விடுதலையும், சிறையும்

இந்த சந்தர்ப்பத்தில் ஆகஸ்டு மாதம் 11-ந் தேதி நடுநிசியில் திடீரென தற்காலிகமாக ஜவஹர் விடுதலை செய்யப் பட்டார். சுகக்கேடாயிருந்த கமலா நேருவைப் பார்ப்பதற்

காக அதிகாரிகள் அவ்வாறு செய்தார்கள். கமலா நேரு துரும்பாய் இளைத்து நோயுடன் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டு வருந்தினர். அவருக்குத் தக்க சிகிச்சை செய்ய சமயம் கிடைப்பதில்லையே என்றெண்ணி ஏங்கினர். இவ்வாறு பதினெரு தினங்கள் கழிந்தன. மறுதினமே மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். கமலா நேருவுக்கு அபாயம் என்று தோன்றும் போதெல்லாம், அரசாங்கம் ஜவஹர்லாலை வீட்டுக்கனுப்பி, கமலா நேருவைப் பார்த்துவிட்டு வரவோ, பக்கத்தில் ஓரிரண்டு நாள் இருக்கவோ அநுமதித்தது. கணவர் பக்கத்திலிருக்கும் போது கமலா நேருவின் வியாதி குணப்படும்; பிரிந்த பிறகு அதிகமாகும். இந்தத் தலைமுறையிலே இந்தியா கண்ட மகா அன்னியோன்ய தம்பதிகள் ஜவஹரும் கமலாவும் என்று சொல்லலாம்.

## ஜவஹர் - கமலா போக்கு

கமலா நேரு மிகவும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். வாழ்க்கைப்பட்டதும் அத்தகைய குடும்பத்தில்தான். மிகவும் செல்வமாய் வளர்ந்தவர். கலியாண காலத்தில் அவருக்கு வயது பதினேழு நிரம்பவில்லை. ஜவஹர்லாலுக்கு அப்போது இருப்பத்தாறு வயது. கமலா நேரு மிகவும் கூச்சமுள்ளவர். இருவருக்குள் இருந்த வாஞ்சையோ அதிகம். முன்கோபத்தினுல் சிற்சில சமயங்களில் அவர்களுக்குள் சச்சரவு உண்டாகும். ஆனுல் ராஜி ஏற்படவும் நேரமாகாது. கலியாணமாகி இருபத்தொரு மாதத்திற்குப் பின்னர் இந்திரா பிறந்தாள். சதிபதிகள் சந்தோஷமாகக் காலங்கழித்தது, கலியாணமாகி நான்கு வருஷம் வரையில்தான்.

## தேக அசௌக்கியத்திலும் கமலாவின் தேசத் தொண்டு

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பத்தி லிருந்தே ஜவஹர் அரசியல் கிளர்ச்சியில் தீவிரமாகக் கலந்து கொண்டார். அப்போது அவருக்கு வயது முப்பது. கமலா நேருவுக்கு இருபத்தொன்று. புத்திரி இந்திராவுக்கு ஒரு வயது. அது முதலே ஜவஹருக்கு கமலா நேருவை கவனிக்கக்கூட நேர மில்லை. இதன் பலனாக கமலா நேரு உள்ளூர மிகவும் கஷ்ட மடைந்து வந்த போதிலும், கணவருக்கு ஆறுதலளிக்க எப்போதும் தயாரா யிருந்தார்.

கமலாவுக்கு அடுத்தடுத்து நோய்வர ஆரம்பித்தது. ஜவஹர்லாலுக்கோ அடுத்தடுத்து சிறைவாசம் ஏற்பட்டது. சிறைப் பேட்டிகளில் தான் ஒருவரை யொருவர் காண முடிந்தது. ஜவஹர்லால் பலவருடகாலம் வரை சேர்ந்தாற் போல் சிறையில் இருக்கும்படி நேர்ந்ததால், கமலா நேரு வுக்குச் சரியான சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யவும் முடிய வில்லை. அது தவிர கணவரைப் பிரிந்து இருந்ததினால் மனோவியாகூலம் ஏற்பட்டது. அதனால் ஏற்கனவே இருந்த நோய் அதிகமாய்க் கொண்டே வந்தது. இந்நிலையிலும் கமலா நேரு காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஸ்தானம் வகித்து வந்தார். ஐக்கிய மாகாண காங்கிரஸ் சர்வாதிகாரி பதவியை ஏற்றார். அதன்பயனாக சிறையும் சென்றார். இதனால் இன்னும் அவரது உடல்நிலை சீர் கெட்டது என்று சொல்லவும் வேண்டுமா?

## கமலா நேருவை கவனிக்க முடியாமையால் கவலை

தமது கவனிப்பு இல்லாததினால் தான் கமலா நேரு வின் தேகநிலை கெடுகிற தென்பது ஜவஹர்லாலுக்கு நன்

ருய் தெரியும். தெரிந்தும் என்ன பயன்? அவர் சிறைக்கு வெளியே சிறிது காலமாவது தொடர்ந்தாற்போல் இருந்தா லல்லவோ கமலா நேரு விஷயமாக ஏதேனும் ஏற்பாடு செய்ய முடியும்? கமலா நேருவை கவனிக்க வேண்டு மானல் அவர் தேசீய வேலைகளிலே ஈடுபடாமலிருந் தால் தான் முடியும். பிறவி வீரரான ஜவஹர்லால் நேரு அவ்வழியை எவ்வாறு கடைப்பிடிக்க இயலும்! ஆனல் கமலாவுக்குத் தாம் நியாயம் வழங்கவில்லை என்கிற வருத்தம் அவர் மனதில் ஒருபுறம் இருந்து கொண்டே யிருந்தது. அதனல் கவலைகளும் தொல்லைகளும் ஏற்பட்டன. முகத்திலே கோடுகளும் சுருக்கங்களும் தோன்றின. தலைநரைத்து வழுக்கையும் விழுந்துவிட்டது.

## மானமே பெரிது வாழ்வு பெரிதல்ல

"கமலா உன் மகளா?" என்று கூட சிலர் ஜவஹர் லாலை கேட்க ஆரம்பித்தார்கள். கமலாவும் இந்திராவும் சகோதரிகளைப் போல் காணப் பட்டார்கள். அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்பதாகப் பொதுவாக வாக்குறுதி கொடுத்தால், கமலாவின் பக்கத்தில் இருக்கும் படியாக விடுதலை செய்யப் படுவாரென, சிறையில் இருக்கும்போதெல்லாம் அதிகாரிகள் அவரிடம் யோசனை சொன்னர்களாம். ஆனல் ஜவஹர்லால் அதை நிராகரித்தார். கமலாவின் விருப்பமும் அதுவே. மானமே பெரிது; வாழ்வு பெரிதல்ல என்று சதிபதிகள் எண்ணினர்.

## கமலா நேருவுக்கு மேல்நாட்டில் சிகிச்சை

கமலா நேருவைச் சிகிச்சைக்காக ஐரோப்பாவுக்கு அனுப்பியே தீரவேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டது. கமலா நேருவை கப்பலேற்றி அனுப்ப மகாத்மாவும் பம்பாய்

வந்தார். கமலா நேரு மேல் நாடு சென்று சிறிதுகாலம் சிகிச்சை பெற்ருர். இருந்தாற் போலிருந்து, கமலா நேரு வின் நிலைமை கவலைக் கிடமாயிருப்பதாக பாடென் வீலர் வால்டெர் ஆரோக்ய நிலையத்திலிருந்து மெடிகல் ஆபீஸர் ஸ்டேஸ்ஸன் இந்திய ராஜப்பிரதிநிதிக்கு தந்தி கொடுத் திருந்தார். ஜவஹர்லால் நேரு இன்னும் அனுபவிக்க வேண்டி யிருந்த சிறைத் தண்டனையை ராஜப்பிரதிநிதி நிறுத்திவைத்து, எவ்வித நிபந்தனையுமின்றி அல்மோரா சிறையிலிருந்து அவரை விடுதலை செய்தார். இது நடந்தது 1935-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதத்தில்.

## ஜவஹர் வருகையைப் பற்றி முஸோலினியின் காரியதரிசிக்கு அறிவிப்பு

உடனே ஜவஹர்லால் நேரு அலகாபாத்திலிருந்து ஆகாய விமானத்தில் புறப்பட்டார். அவரது யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளையும் கலெக்டர் இவான்ஸ் செய்து கொடுத் தார். அவர் இத்தாலி வழியாகப் போகவேண்டி யிருந் தது. ஆதலால் நௌரோஜி குடும்பத்தினர் அவரது வருகையைப்பற்றி ஸீனர் ஸ்கிராபா விற்கு முன்ஞடியே தகவல் தெரிவித்தனர். மேற்படி ஸீனர் ஸ்கிராபா இந்தி யாவில் இத்தாலி ஸ்தானீகரா யிருந்தவர். இப்போது முஸோலினிக்குக் காரியதரிசியாக இருந்து வருகிருர்.

## லண்டன் காமன்ஸ் சபையில் ஜவஹருக்கு வரவேற்பு

டெல்லி விமான நிலையத்தில் டாக்டர் அன்சாரி, ராஜாஜி, ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி முதலிய தலைவர்கள் ஜவஹரின் வருகைக்காகக் காத்திருந்தனர். விமானத்தி லிருந்து கீழே இறங்கியதும் ஜவஹரை ராஜாஜியும், அன்சாரி

யும் ஆலிங்கனம் செய்து கொண்டனர். ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி தாய்க்குரிய அன்புடன் அவரைத் தட்டிக் கொடுத்தார். பிறகு ஜவஹரின் விமானம் கராச்சி மார்க்கமாய் ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்டது.

ஜவஹர் கமலா நேருவை நேரில் சென்று பார்த்து ஸ்விட்ஜர்லாந்தில் உள்ள லாஸேன் என்னும் இடத்துக்கு அனுப்பி சிகிச்சை செய்வித்தார். அவர் அச்சமயம் இங்கிலாந்துக்கு இருமுறை சென்றார். காமன்ஸ் சபை மண்டபத்தில் பார்லிமெண்டு மெம்பர்கள் அவருக்கு வரவேற்பளித்தனர். எல்லா கக்ஷித் தலைவர்களையும் பிரமுகர்களையும் அவர் கண்டு பேசினார். அநேக கூட்டங்களிலும் பிரசங்கம் செய்தார். ஜார்ஜ் லான்ஸ்பரி, ஆர்தர் கிரீன் வுட், மேஜர் ஆட்லி, ஸ்ரீமதி எலன் வில்கின்ஸன் முதலிய தொழிற் கக்ஷிப் பிரமுகர்களும் கூட்டங்களுக்கு வந்திருந்தனர். சரமாரியாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஜவஹர்லால் நேரு சரியானபடி பதிலளித்தார்.

## கமலா நேருவின் தேகவியோகம்

குணமடைந்து விட்டதாக டாக்டர்கள் சொல்லவே பிப்ரவரி மாதம் 29-ந் தேதி கமலா நேருவை இந்தியாவுக்கு அழைத்து வருவதென்று ஜவஹர்லால் நேரு தீர்மானித்தார். ஆனால் தெய்வம் வேறுவிதமாய் தீர்மானித்திருந்தது. அதற்கு முந்நாளே காலை ஐந்து மணிக்குக் கமலா நேரு உயிர் நீத்தார். இச்செய்தி கேட்டு தேசம் முழுமையும் துக்கத்தில் ஆழ்ந்தது. பலவிதமான தியாகங்களைச் செய்த கமலா நேரு கடைசியாக தம் உயிரையும் தேசத்திற்காக தியாகம் செய்து விட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்தாறுதான்.

## மனைவியை இழந்த சேயும் தாயும்

ஜவஹர்லால் நேரு தன்னந் தனியாக இந்தியா வந்து சேர்ந்தார். அவர் முகத்தில் சோகம் குடிகொண்டிருந்தது. அவர் சிறந்த வீரராயினும் கமலா நேருவின் அன்பு அதை வென்று விட்டது. 1936-ம் வருஷம் மார்ச்சு மாதம் 11-ந் தேதி விமான மார்க்கமாய் அலகாபாத் வந்து சேர்ந்தார். அன்றைய தினத்தைக் கமலா நேரு தினமாக இந்தியா முழுதும் கொண்டாடியது. ஜவஹர்லால் நேரு கமலா நேருவின் அஸ்தியை ஓர் பேழையில் வைத்திருந்து மலர் மாலை சூட்டி யிருந்தார். அதை அவர் கமலா நேருவின் சகோதரரான கைலாஸ கௌல் வசம் ஒப்புவித்தார்.

மனைவியைப் பறிகொடுத்து விட்டு வரும் மகனைக் கண்டதும் ஸ்வரூபராணி நேரு கண்ணீர் விடுத்தார். தாயும் சேயும் சந்தித்த காக்ஷி உருக்கமாயிருந்தது. ஜவஹரைக் காண்பதற்காக அங்குவந்திருந்த பண்டித மாளவியா அவ்விருவருக்கும் ஆறுதல் கூறினர்.

## கமலாவின் அஸ்தியை ஜவஹர் கண்ணீரால் கரைத்தல்

அதே தினத்தில் கமலா நேருவின் அஸ்தி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஜம்னுலால் பஜாஜ், பாபு ராஜேந்திரர், சப்ரூ முதலியவர்கள் பதினுயிரக் கணக்கான ஜனங்களுடன் துக்க ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கங்கை யமுனை சரஸ்வதி நதிகள் கூடும் திருவேணி கட்டத்தில், ஜவஹர்லால் நேரு கமலாவின் அஸ்தியை கண்ணீருடன் கலந்து கரைத்தார். உலகின் பல பாகங்களிலிருந்து வந்த அநுதாபச் செய்திகள் அவர் துக்கத்தை சிறிதளவு போக்கின.

"கமலாவை இழந்து நான் தனியனானேன். எனது தேச மக்கள் என்னிடம் இத்தருணம் காட்டியுள்ள அன்பு எனக்குப் புதிய பலத்தை கொடுத்துவிட்டது. இழந்த தைரியமும் என்னை மீண்டும் வந்தடைந்துவிட்டது" என்று ஜவஹர்லாலே அச்சமயம் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

## மீண்டும் காங்கிரஸ் தலைமைப் பதவியும் தாயின் மரணமும்

அவ்வருடம் மீண்டும் இரண்டாவது தடவையாக பண்டித ஜவஹர்லால் நேரு காங்கிரஸ் அக்கிராசனரானார். இதற்குள் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பம் நாட்டிலே தோன்றியது. அதன் காரணமாக காங்கிரஸ் தேர்தலில் ஈடுபட்டது. அது மெஜாரிட்டி ஸ்தானங்களைப் பெற்று மந்திரி சபையை அமைத்தது. இதெல்லாம் ஜவஹர்லால் நேருவுக்குப் பிடிக்காத விஷயம். ஆயினும் மகாத்மா காந்தியின் தலைமையிலும், அவரது அத்தியந்த சகாக்களின் உண்மையிலும் அவருக்கு பரிபூர்ண நம்பிக்கை யிருந்ததால் வெகு தூரம் அவர் விட்டுக் கொடுத்தார்.

ஆனால் காங்கிரஸ் கக்ஷி சட்டசபை வேலையில் ஈடுபட்டாலும் தனது லக்ஷியத்தை மறந்து விடாமல் அதை அடையும் மார்க்கத்தையே நோக்கிச் செல்ல வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமா யிருந்தார். இச்சமயம் அவரது அருமைத் தாயார் ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேருவும் காலகதி யடைந்தார்.

## ஜவஹர்லாலுக்கு ஜெர்மனியில் ராஜோபசாரம்

1938-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 6-ந் தேதி பண்டித ஜவஹர்லால் நேரு ஜெர்மனியிலுள்ள மூனிக் போய்ச்

சேர்ந்தார். இந்திய மாணவர்களைத் தவிர 600 ஜெர்மானிய மாணவர்களும், கடும் பனிக்கிடையே, பண்டித ஜவஹர்லால் நேருவை வரவேற்க ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர். ஜவஹர்லால் நேருவும், அவரது புதல்வி இந்திரா நேருவும் ஐரோப்பியர்களைப் போல் உடை தரித்திருந்தனர். அங்குள்ள இந்தியர்கள் ஜவஹர்லால் நேருவை வரவேற்று ராஜோப சாரம் செய்தனர். ஜவஹர்லால் நேரு ஆடம்பரத்தைப் பார்த்து சற்றுக் கோபமடைந்தார்.

"நீங்கள் விசித்திர பிரகிருதிகளாக இருக்கிறீர்களே! நான் ஒரு மகாராஜா என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக் கிறீர்களா என்ன? நான் ஒரு ஏழை; எனக்கு இந்த ராஜ ஆடம்பரம் எதற்காக?" என்று அவர்களிடம் சொன்னார்.

## ஜெர்மன் எல்லையில் சாமான் சோதனை

ஒரு விருந்து நடத்துவதென்றும், அதற்கு குறிப்பிட்ட ஜெர்மன் பிரமுகர்களை அழைப்பதென்றும் ஏற்பாடா யிருந்தது. அதற்குடன்பட ஜவஹர்லால் நேரு மறுத்து விட்டார். "நான் எந்த ஜெர்மனியருடனும், எந்த விஷயம் பற்றியும் சர்ச்சை செய்யத் தயாராக இல்லை. இங்குள்ள பாரத வாசிகளை மட்டுமே சந்தித்து அவர்களுடன் பரிச்சயம் செய்து கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

ஜவஹர்லால் நேருவின் சாமான்கள் ஜெர்மன் தேசத்தின் எல்லையில் 'சோதனை' செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டன. இரண்டரை மணி நேரத்திற்குப் பிறகே அதிகாரிகள் அவரிடம் அவைகளை சேர்ப்பித்தனர். அதற்குள் பண்டித நேரு ஜெர்மன் ரயில்வேமீது வழக்குத் தொடருவ தெனத் தீர்மானம் செய்திருந்தார்.

## நேருவை ஜெர்மன் பிரசார மந்திரி கெப்பல்ஸ் காணுதல்

மறுநாள் காலே பண்டித ஜவஹர்லால் நேருவைக் காண, அவர் தங்கியிருந்த ஓட்டலுக்கு ஜெர்மனியின் பிரசார மந்திரி யான டாக்டர் கெப்பல்ஸ் வந்திருந்தார். தாம் பண்டித நேருவை சந்தித்துப்பேச ஆவலாயிருப்பதாக ஓட்டல் மானேஜர் மூலம் அவர் சொல்லி யனுப்பினர். கெப்பல்ஸை சந்திப்பது அவசியமில்லை என்பதே ஜவஹர்லால் நேருவின் நினைப்பு. என்ருலும் மேல் மாடியில் வந்து தம்மைப் பார்க்க கெப்பல்ஸுக்கு அனுமதி கொடுத்தார். இரண்டே நிஷத்தில் டாக்டர். கெப்பல்ஸ் பண்டித நேருவின் அறைக்குள் நுழைந்தார். அவரது தேச சம்பிரதாயப்படி 'ஹெய்ல் ஹிட் லர்" என்ற கோஷத்துடன் கையை உயர்த்தி வணங்கினர்.

## நேருவைக் காண ஹிட்லரின் ஆவல்

பண்டித ஜவஹர்லால் நேருவோ கைகூப்பி வணக்கம் செய்தார். டாக்டர் கெப்பல்ஸ் ஆடம்பரமான ராணுவ உடை யில் தம்மை அலங்கரித்துக் கொண்டிருந்தார். உட்காரச் சொல்லியும் "பரவாயில்லை; நான் நின்றுகொண்டே இருக் கிறேன்" என்று கெப்பல்ஸ் பதில் அளித்தார். பிறகு பண்டித நேரு வற்புறுத்தியதின் பேரில் அவர் ஸோபாவில் அமர்ந்து கொண்டார். முதலில் க்ஷேம சமாசாரங்களை விசாரித்து விட்டு டாக்டர் கெப்பல்ஸ் மெதுவாக தமது சட்டையி லிருந்து தங்க கில்ட் போட்ட சர்க்கார் கடுதாசி ஒன்றை பண்டித நேருவின் கையில் கொடுத்தார். "நான் உங்களை சந்திக்க மிகவும் ஆவலுள்ளவனுக இருக்கிறேன்" என்று ஹிட்லர் அக் கடிதத்தில் பண்டித நேருவுக்கு எழுதி யிருந்தார்.

## 'என்னால் இப்போது ஹிட்லரைக் காண முடியாது'

"நான் இப்போது ஹிட்லரை சந்திப்பதற்கு யாதொரு அவசியமும் ஏற்படவில்லை. தவிரவும், நான் இங்கு எந்த அரசியல் சம்பாஷணைகளிலும் கலந்து கொள்ள வரவில்லை. நான் ஜெர்மனியை சுற்றிப் பார்க்கவே வந்திருக்கிறேன். ஆகவே என்னால் இப்பொழுது ஹிட்லரை சந்திக்க முடியாது" என்று பண்டித நேரு பதிலளித்தார்.

இந்த பதிலைக் கேட்டு டாக்டர் கெப்பல்ஸ் திடுக்கிட்டு விட்டார். இம்மாதிரியான பதிலை அவர் எதிர் பார்க்கவேயில்லை.

## டாக்டர் கெப்பல்ஸ் மீண்டும் ஜவஹரை வேண்டுதல்

"அரசாங்க விருந்தினராக யிருக்க தாங்கள் ஒப்புக் கொண்டால் ராஜோபசாரம் செய்து கொடுக்கச் சித்தமாயிருக்கிறோம். தங்களுக்கு மரியாதை செய்வதை எங்களுக்கேற்பட்ட கௌரவமாகக் கருதுகிறோம்" என்று டாக்டர் கெப்பல்ஸ் சொல்லிப் பார்த்தார்.

அதற்கெல்லாம் பண்டித ஜவஹர்லால் நேரு மசியாமல் புன்னகை பூத்த முகத்துடன் பதிலளித்தார்.

"உங்களுடைய கிருபையால் நான் சௌகர்யமாகத்தான் இருக்கிறேன். என்னுடைய இந்திய சோதரர்களின் விருந்து உபசாரத்தால் எனக்கு எல்லா வசதிகளும் கிடைத்திருக்கின்றன. ஆகவே, உங்களுக்கு கஷ்டம்தர நான் விரும்பவில்லை. இவ்வளவு சிரமப்பட்டு தாங்கள் இங்கு வந்ததற்கு வந்தனமளிக்கிறேன்" என்று கூறி டாக்டர் கெப்பல்ஸுக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டார்.

பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு இருந்த தைரியத்தை நாம் மெச்சாமலிருக்க முடியாது. ஓர் பெரிய எதேச்சாதி காரியின் அழைப்பை ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பது லேசான காரிய மல்ல. அதுவும் அவனுடைய ராஜ்யத்தில் இருந்து கொண்டே அவ்வாறு செய்வதற்கு அசாதாரண மான தைரியம் வேண்டும். எல்லோராலும் அவ்வாறு செய்ய முடியாது.

## ஹிட்லர்—முஸோலினி மீது வெறுப்பு

முஸோலினி விஷயத்திலும் பண்டித நேரு இதே மாதிரி நடந்து கொண்டார். தாம் முஸோலினியின் முகத்தையும் பார்க்க விரும்பவில்லை யென்று முஸோலினியின் காரியதரிசி யின் மூலமே சொல்லியனுப்பி விட்டார்.

பண்டித நேரு இவ்வாறு நடந்து கொண்டது தவறு? அகம்பாவத்தினலா இவ்வாறு அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தார்? இல்லவேயில்லை. ஹிட்லர், முஸோலினி இருவரும் உலகில் எவ்வளவு பிரசித்தமானவர்களா யிருந்தபோதிலும் அவர்கள் செய்யும் அக்கிரமத்தின் காரணமாக அவர்களை அவர் புறக்கணிக்க நேர்ந்தது. அவ்விருவர்களும் தங்கள் செய்கைகளால் மனித வர்க்கத்திற்கே பெருந் தீங்கு இழைத்து வருகின்றனர் என்கிற திடமான அபிப்பிராயம் பண்டித நேருவின் மனதில் நன்கு பதிந்திருந்தது. அதனுல் தான் அவர்கள்மீது ஓர்வித வெறுப்பும், அதை யொட்டி அவர்கள் விஷயத்தில் அலக்ஷிய பாவமும் ஏற்பட்டிருந்தன.

## ஸ்பெயினிலும் சீனுவிலும் ஜவஹரின் இருப்பிடத்தில் குண்டு வீச்சு

உலகத்தில் ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் எந்த நாட்டி லிருந்தாலும் சரி, அவர்களுக் கெல்லாம் நண்பர் பண்டித

நேரு. அவர் விமானத்தில் சீனு சென்று தலைவர் சியாங்கே ஷேக்குடன் உரையாடி விட்டு வந்தாரே அதை சீனு தேசம் இன்றைக்கும் மறக்கவில்லை. சீனுவிலே சியாங்கே ஷேக்கும் நேருவும் பேசிக் கொண்டிருந்தபோதே, ஜப்பானிய விமானங்கள் ஆகாயத்திலிருந்து குண்டுகளைப் பொழிந்தன. அச்சம்பவம் பண்டித ஜவஹர்லால் நேருவை சிறிதும் திடுக்கிட வைக்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக ஓர் ஆம்புலன்ஸ் மோட்டாரை அவர் சீனுவுக்கு பரிசாக அனுப்பி வைத்தார். இதே போல் ஸ்பெயின் தேசத்திலே சர்க்காரைக் கவிழ்த்து புது சர்க்காரை ஏற்படுத்த இத்தாலியும் ஜெர்மனியும் சதி செய்ததே, அந்தச் சண்டையின் போது கூட பண்டித நேரு ஸ்பெயினுக்குச் சென்று, மாட்ரீட் நகரில் எதிரிகளின் விமானம் குண்டு போடும் போது தங்கியிருந்தார். இதிலிருந்து பண்டித நேருவின் தீரத்தை நாம் ஒருவாறு அறியலாம்.

## மகாத்மாவிடம் அசைக்க முடியாத நம்பிக்கை

ஜவஹர்லால் நேருவை குருவாக மதிக்கும் அபேதவாதிகளில் சிலர் மகாத்மா காந்தியைத் தூற்றுவதும் அவரது வேலை திட்டங்களைப் பற்றிக் குறை கூறுவதுமே தொழிலாகக் கொண்டிருந்தனர். ஜவஹர்லால் நேரு அவர்களை சரியானபடி கண்டித்தார். "மகாத்மாவின் வழியும் போக்கும் நமக்குப் புரிவதில்லை. என்றாலும் அவர் வழியே செல்வோமானல் நமக்கு வெற்றி நிச்சய மேற்படுகிறது. ஆகையால் தயக்கமில்லாமல் அவரையே நாம் பின்பற்ற வேண்டும். மற்றவர்கள் வாய்ப்பேச்சு வீரர்களா யிருக்கலாமே ஒழிய, காந்தியடிகளைப் போல் ஒரு பெரிய காரியத்தை எடுத்து நடத்துவதென்பது இயலாத காரியம்" என்று பண்டித

நேரு சொல்லி மகாத்மாவிடம் தமக்குள்ள பூர்ண நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டார்.

'நாடு விடுதலை பெற பூர்ண அஹிம்ஸையையே கடைபிடிக்க வேண்டும். நிர்மாணத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றி வைக்க வேண்டும்' என்றும் வற்புறுத்தலானார். கதர், நூல் நூற்றல் மீது என்றுமில்லாத பற்று கொண்டார்.

## காந்தி—ஜவஹர் பரஸ்பர அன்பு

சில விஷயங்களில் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட போதிலும் மகாத்மாவிடம் அவருக்கிருந்த மதிப்பு என்றும் குறைந்தது கிடையாது. ஜவஹர்லால் நேரு தமது தந்தையிடம் செலுத்தி வந்த அன்பைப்போல் மகாத்மாவிடம் செலுத்தி வருகிறார். மகாத்மாவோ தாயன்புடன் ஜவஹர்லால் நேருவைக் கவனித்து வருகிறார். அவரைக் கலக்காமல் அரசியல் விஷயமாக மகாத்மா காந்தி எவ்வித முடிவுக்கும் வருவதில்லை. கூடிய வரை ஜவஹரின் மனம் நோகாமல், அவர் போக்குப்படியே நடக்கவேண்டுமென்பது காந்தியடிகளின் எண்ணம்.

## 'பாபு! நீங்கள் என்னை தள்ளிவிட மாட்டீர்கள் அல்லவா?'

காங்கிரஸுக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் ஐரோப்பிய யுத்த லக்ஷியங்கள் சம்பந்தமாகத் தகராறு வலுத்தது. பேச்சுரிமைப் போரை காந்தியடிகள் 1940-ம் வருஷம் அக்டோபர் மாதம் 17-ந் தேதி யன்று நாட்டிலே தோற்றுவித்தார். அந்த சத்தியாக்கிரகத்தை இன்னும் தீவிரமாக நடத்தவேண்டுமென்று ஜவஹர்லால் நேரு கருதினார்.

இந்நிலைமையில் காந்தியடிகள் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் கேள்விப்பட்டார். ஆகையால் மகாத்

மாவின் எதிர் கால வேலை திட்டத்தைப் பற்றி விவாதிக்க வார்தாவுக்குப் புறப்பட்டார். விடாப்பிடியாக வாதம் செய்வதே ஜவஹர்லால் நேருவின் வழக்கம். இந்த தடவை அவர் மிக்க சாந்தமாக இருந்தார். மகாத்மா காந்தி உண்ணு விரதம் அனுஷ்டிக்க முடிவு செய்ததை ஆக்ஷேபிக்கவுமில்லை.

ஒரு குழந்தை தமது தந்தையிடம் வாஞ்சையுடனும் உறுதியுடனும் கூறுவதுபோல் ஜவஹர்லால் காந்தியிடம் சொன்னார் "பாபு! நீங்கள் என்னை தள்ளிவிட மாட்டீர்கள் அல்லவா ?" யென்று.

## 'அம்மா! கடவுள் தூங்குகிறார்'

சிவக்கிராமக் குடிசையில், தந்தையும் குழந்தையும் சிரிப்பதுபோல் கலகலவென்று மகாத்மா காந்தியும் ஜவஹரும் சிரித்தனர். ஜவஹர் புறப்படும் சமயம் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி ஒரு விநாடி காத்திருக்கும்படி சொன்னார். சில நாட்களிலோ சில மணி நேரத்திலோ ஜவஹர்லால் கைதியாவாரென்பது ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்கு தெரியுமாகையால் ஜவஹரின் நெற்றியில் திலகம் இட விரும்பினார். ஆனால் ஜவஹர் "அம்மா! அது எதற்கு? அவசியமில்லை" என்றார். கஸ்தூரிபாய், "நாம் எப்போது மீண்டும் சந்திப்போமோ! அதைக் கடவுளே அறிவார்" என்றார். "இல்லை அம்மா! கடவுள் தூங்குகிறார்" என்றார் ஜவஹர். கடவுள் விழித்திருப்பாராறைல் உலகில் தவறுகள், அவமதிப்பு, கொடூரம், மிருகத்தனம், பகைமை, அஞ்ஞானம் இவை யெல்லாம் எப்படி மலிந்திருக்கும் என்பதே அவர் கருத்து போலும்!

## பண்டித ஜவஹர்லால் நேரு கைதியாதல்

காந்தியடிகளைக் கண்டு பேசிவிட்டு, அலகாபாத்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது சியோகியில் அக்டோபர்

1940 ஷ 31வ இரவு 8 மணிக்கு பண்டித ஜவஹர்லால் நேரு கடைசியாக கைது செய்யப்பட்டார். கோரக்பூரில் யுத்த எதிர்ப்புப் பிரசங்கம் செய்ததாக அவர்மீது குற்றம். அதற்காக நான்கு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டது. உலகின் நாலாபக்கங்களி லிருந்தும் பல பிரமுகர்கள் இச் செய்கையைக் கண்டித்தனர். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் இதைப் பற்றி சர்ச்சை நடந்தது. பண்டித ஜவஹர்லால் நேருவை விடுதலை செய்ய வேண்டுமெனப் பல பார்லிமெண்டு அங்கத்தினர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். இந்தியா முழுதும் இது சம்பந்தமாக மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

## பதினான்கு வருடத்தில் பன்னிரெண்டு வருடம் சிறைவாசம்

பண்டித ஜவஹர்லால் நேரு இப்போது எட்டாவது தடவையாக சிறை புகுந்திருக்கிறார். அவர் 1921-ம் வருஷம் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தது முதல் 1935-ம் வருடம் வரை ஏழுமுறை சிறைக்குப் போயிருக்கிறார். மொத்தம் சிறைத் தண்டனை காலம் பன்னிரெண்டு வருஷமாகும். தேச விடுதலையின் நிமித்தம் எத்தனையோ தேச பக்தர்கள் சிறை சென்றிருக்கின்றனர். ஆயினும் இம்மாதிரி தொடர்ச்சியாக பதினான்கு வருஷ காலத்தில் பன்னிரெண்டு வருட சிறைத் தண்டனை எவருமே அனுபவித்தது கிடையாது. அவ் விஷயத்தில் ஏனையோரைக் காட்டிலும் அவர் சிறந்தவராக விளங்குகிறார்.

தாய் தந்தையரையும், மனைவியையும் இழந்த துக்கம் இன்னும் ஆறவில்லை. அவர் போன்ற நிலைமையில் வேறெவரேனும் இருப்பார்களே யானால் தேச சேவையில் தீவிர

மாக ஈடுபட மாட்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம். அவரது சகோதரிகள் ஐக்கிய மாகாண மந்திரியா யிருந்த ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும், கிருஷ்ணா ஹாதீசிங்கு மாவர். அவரது புதல்வி இந்திரா நேருவுக்கு இப்போது வயது இருபத்தொன்று ஆகிறது. சீமையில் படித்து வருகின்றார். ஹரிஜன சேவா சங்க உபதலைவியான ஸ்ரீமதி ராமேஸ்வரி நேரு ஜவஹர்லால்நேருவின் அண்ணி யாவர். அதாவது மோதிலால் நேருவின் தமையன் பிள்ளையான பிரிஜ்லால் நேருவின் மனைவி.

## பண்டித நேருவின் பொன் மொழிகள்

ஐரோப்பிய நாடுகளில் கட்டாய ராணுவ சேவை இருப்பது போலவே இந்தியாவிலும் நாட்டின் நலனுக்காக ஜனங்கள் ஏதாவது ஒரு வேலையை கட்டாயமாகச் செய்ய வேண்டும்.

* * *

ராணுவ உணர்ச்சி ஒரு நாட்டை யுத்தத்திற்குப் பலசாலியாக்கலாம். ஆனால், அதனால் அறிவு வளர்ச்சி குன்றிவிடும். இதன் விளைவாக நாட்டின் நலனுக்கு பேராபத்து வந்து சேரும்.

* * *

எந்த அவசர நிலைமையையும் சமாளிக்க கட்டுப்பாடான அஹிம்ஸை ஒன்றுதான் சிறந்த ஆயுதம். நம்மீது வெடி குண்டுகள் வீசினால் நாம் பதிலுக்கு பதில் செய்யமுடியாது. ஆனால் நம்மை யாரும் ஆள முடியாதபடி செய்து விடலாம்.

* * *

காங்கிரஸ் நீண்டகாலம் சும்மா யிருக்க முடியாது. ஏதாகிலும் ஒரு வழியில் துரிதமாக முடிவு செய்தாக வேண்டி

யிருக்கிறது. நாம் நீண்ட காலம் பொறுமையுடன் காத்திருந்து விட்டோம். இந்தியாவுக்கு கெடுதியும் அவமதிப்பும் விளைவிக்கக்கூடிய விஷயங்களை சும்மா அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது.

* * *

எதிர்காலம் நமக்கு என்ன கொண்டு வந்தாலும், சுதந்திரமானது, போராட்டமும் கஷ்டமும் வருத்தமுமின்றி வராது என்பதே எனது நம்பிக்கையாகும். யுத்தமும் போராட்டமும் நிறைந்த இவ்வுலகில் நாம் சுதந்திரம் பெற, கொடுக்க வேண்டிய விலையை கொடுக்காமல் இருக்க முடியாது. வேறு மாதிரி எதிர்பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

* * *

இந்த தேசத்தில் அபேதவாத எண்ணம் வளரவேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆயினும் இதை காங்கிரஸின் மீது பலவந்தமாகத் திணிக்க நான் விரும்பவில்லை. சுதந்திரப் போருக்கு இடைஞ்சல் செய்யவும் விரும்பவில்லை.

* * *

என்றைக்கு மகாத்மா காந்தி அரசியல் மேடைமீது ஏறினாரோ, அன்று முதல் அவரது செல்வாக்குக்கு யாதொரு பங்கமும் நேர்ந்ததேயில்லை. நாளாக நாளாக, அவருடைய செல்வாக்கு வளர்ந்து கொண்டே வருகிறது. இன்றைக்கும் அது வளர்ந்து கொண்டு தானிருக்கிறது. சாதாரண மனித சுபாவத்தால் மகாத்மா காந்தி சொல்வதைப் பொதுமக்கள் செய்யாமலிருக்கலாம். ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் மகாத்மா காந்தி குடிகொண்டு விட்டார். தக்க சந்தர்ப்பங்கள் நேர்ந்தால், அவர்கள் மகத்

தான இயக்கத்தில் கலந்து கொள்வார்கள். மற்ற சமயங்களில் சாய்ந்து கொடுப்பார்கள்.

## பண்டித ஜவஹர்லால் நேருவின் குணாதிசயங்கள்

பண்டி ஜவஹர்லால் நேரு மூடப் பழக்க வழக்கங்களை வெறுப்பவர். உயர்வு தாழ்வைக் கண்டு சகியாதவர். அவர் செல்வந்தரான போதிலும் ஏழைகளுடன் நெருங்கிப் பழகுபவர். ஏழைகளின் கேவலமான நிலைமையைக் கண்டு மனம் கசிவார். அதுவே அவரை அபேதவாதியாக மாற்றியது. அவரிடம் பொய் சூது, கள்ளங் கபடம் ஒன்றுமே கிடையாது. மனதில் தோன்றுவதை யாருக்கும் பயப்படாமல் அப்படியே வெளியிடுபவர்.

தினமும் தவராமல் தேகப் பயிற்சி செய்பவர். முக்கியமாக சிரஸாசனம் செய்வதில் மிகவும் பிரியமுடையவர். அதுவே அவருக்கு சமய சஞ்சீவி. நாடக சங்கீதக் கலைகளில் விசேஷ விருப்பம் உள்ளவர். ஹார்மோனியத்தைத் தொலைக்க வேண்டுமென்பது அவரது திடமான எண்ணம். அவருக்கு தாடி மீசைகளைக் கண்டால் பிடிப்பதில்லை. தலைக்குடுமியைக் கண்டாலும் அப்படித்தான்.

மிகவும் படபடப்புள்ளவர். என்றாலும் மரியாதைக் குறைவாக யாரையும் பேசமாட்டார். அன்போடும் அடக்கத்தோடும் பேசுவார். அவர் சிறந்த பேச்சாளரல்ல. அழகு படுத்திப் பேச அவருக்குத் தெரியாது. அவர் பேசும் பேச்சுக்கள் இருதயத்தி லிருந்து வருபவை. ஆகையால் அவைகள் உணர்ச்சியோ டிருக்கும். கேட்பவர்களுக்கு புதிய உத்வேகத்தை ஊட்டக்கூடியவை. சோர்வு, அவநம்பிக்கை, வெறுப்பு முதலியவைகளை போக்குபவை.

அவர் நாட்டிலுள்ள சகல கக்ஷியினராலும் நன்கு மதிக்கப் பெற்றவர். திடநம்பிக்கை உள்ள வீரர். ஒவ்வொரு இளைஞனின் உள்ளத்திலும் குடிகொண்டிருப்பவர்.

## மகாத்மாவுக்குப் பிறகு நேருவே நாட்டின் தலைவர்

மேனாட்டு அரசியல் விஷயங்களைப் பற்றி மற்ற தலைவர்களைக் காட்டிலும் அதிகமாகத் தெரிந்து கொண்டிருப்பவர் ஜவஹர்லால் நேருவே. ஆனால் அவரைவிட நடைமுறையில் காரியங்களை நடத்திக் காட்டக்கூடிய ஆற்றலும், அனுபவமும், அறிவும் ராஜாஜி, ராஜேந்திர பாபு, வல்லபாய் முதலியோர் பெற்றிருக்கின்றனர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

மகாத்மா காந்திக்கு முக்கியமான சந்தர்ப்பங்களில் யோசனை கூறவும், அவரது வேலைத் திட்டங்களை சரிவர அமுலுக்குக் கொண்டு வரவும் இவர்கள் மிகவும் உதவியாயிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தியின் காலத்திற்குப் பிறகு அந்த ஸ்தானத்திற்கு யார் வந்த போதிலும் இவர்களின் உதவியில்லாமல் எக்காரியத்தையும் வெற்றிகரமாக நடத்துவது என்பது முடியாது. அவ்வளவு முக்கியஸ்தர்கள் இவர்கள்.

மகாத்மா காந்தி உயிருடன் இருக்கும் வரையில் அவரது தலைமைப் பதவியை யாராலும் அசைக்க முடியாது. அவரே வேண்டாமென்று ஒடினாலும் அவரை விட்டுவிட நாடு சம்மதிக்காது. ஆனால் அவர் காலத்திற்குப் பிறகு நம் நாட்டைத் தலைமை வகித்து நடத்தப் போவது ஜவஹர்லால் நேருவே. அதற்கான அறிகுறிகளை இப்போதே நாம் காண்கின்றோம். அத்தகைய நமது எதிர்காலத் தலைவர் நீடுழி வாழ்க!

# பிரேம்சந்த் சிறு கதைகளுக்கு

# மதிப்புரைகள்

பிரேம்சந்த் ஹிந்தி இலக்கியத்தின் தந்தையாவர். அவரது நாவலும் சிறுகதைகளும் சிறந்த பொக்கிஷமாகும். அவைகளின் போக்கு மனதைக் கொள்ளைகொள்ளும் வண்ணம் இருக்கிறது. அத்தகைய நூல்களை தமிழில் கொணருவதனுல் சிறுகதைகள் படிக்கவேணுமென்கிற ஆசையை தமிழ்மக்களிடையே அதிகப்படுத்தலாம். பிரேம் சந்த் எழுதியுள்ளதுபோன்ற சிறுகதைகள் தமிழ்நாட்டுக்குப் புதிதாகையால் ஸ்ரீமான். ஆக்கூர் அனந்தாச்சாரியார் செய்துள்ள சேவை மிகவும் முக்கியத்வம் வாய்ந்ததே. இந்நூலில் உள்ள பன்னிரெண்டு கதைகளையும் மிகமிக அழகாக எழுதியிருக்கிருர். மூலகிரந்தத்தில் இருக்கும் சுவை சிறிதளவும் குன்ருமல்படி தமிழில் தர்ஜமா செய்திருப்பது போற்றத் தகுந்தது. நடையோ மிகவும் சரளமா யிருக்கிறது

ஹிந்து.

*　　　*　　　*

தற்காலத்தில் ஆங்கில இலக்கியம் சிறுகதைகளில் சிறந்திருக்கின்றன. சிறுகதைகள் தற்கால மனிதருள்ளத்தைக் கொள்ளைகொண்டு வாழ்க்கை நுட்பங்களை விளக்கிக் காட்டுவதோடு மனதிற்கு உற்சாகத்தையும் அளிக்கின்றன.

பொதுஜனங்களின் மனதைக் கவரக்கூடிய விஷயங்களைக் குறித்தவைகளாகவும் நவநாகரீக நடையுடை பாவனைகளை சித்தரிப்பவைகளாகவும் சிறுகதைகள் இருக்க வேண்டும். இவை மனிதவாழ்க்கையின் புகைப்படங்களாக அமையவேண்டும்.

பிரேம்சந்த் சிறுகதைகள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பல அழகிய கதைகளின் உயர்ந்த இலக்ஷியங்கள் பொருந்தியனவா யிருக்கின்றன. அவைகளை சமூக வாழ்க்கையின் புகைப்படக் களஞ்சியம் என்று சொல்வது மிகையாகாது. மனதையுருக்கும் சித்திரங்கள், ஹிருதயத்திற்கு கவர்ச்சியை உண்டாக்கும் வர்ணனைகள், சமூக தத்துவங்கள், நமது ஹிந்துக்களுக்கென்றே பிரத்யேகமாகவுள்ள மூட பழக்க

வழக்கங்களின் கண்டனங்கள் முதலியன நிரம்பியுள்ளன. சமூக சூழல்களை வெளிப்படுத்துவதோடு, தூங்கும் மன சாக்ஷியைத் தட்டி யெழுப்புகின்றன. ஸ்ரீ. ஆக்கூர் அனந் தாச்சாரியார் எழுதியுள்ள இக்கதைகளை தமிழுலகு வரவேற் கும் என்பதற்கையமே இல்லை. தினமணி 28—4—40

*　　*　　*

ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியார் நமது வாசகர் களுக்குப் புதியவரல்ல. இவரது சிறுகதைகள், தொடர் கதைகள் பல மித்திரனில் வெளியா யிருக்கின்றன. பிற பாஷைகளிலுள்ள அரியபெரிய நூல்களை தமிழில் ஆக்க வேண்டுமென்பதில் இவருக்கு மிகுந்த அவா உண்டு. அதன் பரிணமம் பிரேம்சந்த் கதைகள் அடங்கிய இந் நூலாகும். இதிலடங்கியுள்ள கதைகள் எல்லாம் சந்தர்ப் பங்கள் நன்கு அமையப்பெற்று நல்ல போதனையை யளிக்கக்கூடியவை. ஸ்ரீ. அனந்தாச்சாரியார் தெளிவான நல்ல தமிழ் நடையில் மொழிபெயர்த்திருக்கிறார். சிறு கதைகள் படிக்கும் வழக்கம் மக்களிடையே அதிகரித்து வரும் இந்நாளில் இந்நூல் தகுந்தவாறு பயன்படுமென எதிர்பார்க்கிறோம். சுதேசமித்திரன் 3—3—40

*　　*　　*

ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியார் பிரேம்சந்தின் கதை களில் பன்னிரெண்டை தமிழுருப்படுத்தி நம் முன் வைத் திருக்கிறார். தமிழன்பர்கள் அக்கதைகளை நுகர்வது அவசிய மாகும். ஹிந்திக்காரர்கள் பிரேம்சந்தின் எழுத்தைப் பொன்போல் போற்றுகின்றனர். நவீன ஹிந்திக்கு சிறிது பளபளப்பூட்டியவர் பிரேம்சந்த் என்று கூறலாம்.

அன்பர் ஸ்ரீ. அனந்தாச்சாரியார் அவரது கதைகளில் சிலவற்றை அப்படியே மொழிபெயர்த்தும், சிலவற்றைத் தழுவியும் எழுதி மெருகு போட்டிருக்கிறார்.

கதைகள் யாவும் சுவை குறையாமல் நல்ல தமிழில் அமைக்கப்பட்டிருக்கின்றன. கதையெழுத்தாளர் என்று

கூறிக்கொண்டு, எழுவாய் பயனிலை இல்லாமலும், எழுதி யிருப்பது தமிழா, ஆங்கிலமா என்ற சந்தேகத்தை எழுப்பத் தகுந்த முறையிலும் 'இலக்கியம்' செய்யும் 'இளம் எழுத்தாளர்' நிரம்பிய இந்தத் தமிழ்நாட்டில், ஸ்ரீ. அனந்தாச்சாரியாரின் மெய்யான தமிழ்க் கதைகளைக் காண மெய்யாகவே சந்தோஷம் கொள்கின்றேன். அக்கதைகளை ஆதரிப்பது தமிழ்நாட்டுக்குப் பொருந்தும். ஹிந்துஸ்தான் 14—4—40

* * *

ஹிந்தி பாஷை சிறுகதைகளுள் பிரேம்சந்தின் கதைகள் தனிச் சோபையுடன் விளங்குபவை. பிரேம்சந்தை ஹிந்திச் சிறுகதையின் மன்னன் என்று கூடச் சொல்லலாம். அவரது கதைகளில் பன்னிரண்டை ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியார் தமிழில் தழுவியும் மொழி பெயர்த்து மிருக்கிறார். இந்தக் கதைகள் எல்லாமே ஹிந்து சமூக வாழ்க்கையின் பிரதி பிம்பங்களாக விருக்கின்றன. வாழ்க்கையின் பல் வேறு பிரச்னைகள் அழகாகக் கையாளப்பட்டிருக்கின்றன.

தாய்மை உள்ளம் தன் குழந்தையைக் காப்பாற்ற, தனது கற்பையும் தியாகம் செய்யத் தயாராகி விட்டதைத் துடிக்க துடிக்கக் கூறியிருக்கிறார் சௌதாமனியில். பால்ய விதவையான யமுனாவின் அகமும் அவளது பருவத்துக்கேற்ற ஆவலும் அப்படியே திறந்து காட்டப்பட்டிருக்கிறது யமுனாவில். பூனையைக் கொன்ற ஒரு அற்ப காரியத்துக்காக இந்த சமூகம் என்ன பாடுபடுகிறது என்கிற விஷயம் ஹாஸ்யரசம் ததும்பச் சித்தரிக்கப் பட்டுள்ளது பழாப் போன பூனையில். மற்றக் கதைகளும் நன்றாயிருக்கின்றன.

எளிய சரளமான தமிழ் நடையில் ஸ்ரீ. அனந்தாச்சாரியார் இக்கதைகளை எழுதியிருக்கிறார். ஆங்காங்கு சம்பாஷணைகளை 'பேச்சு தோரணையில்' அமைத்திருப்பது கதைக்கு விறுவிறுப்பையும் உயிரையும் அளிக்கிறது.

ஹனுமான் 31—12—39

45010